பக்கங்கள்: 12
விலை : 30/-
# காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 09 செவ்வாய்க்கிழமை 23.06.2020 கதிர் 230

### இது ரகசியம் அல்ல!

தேர்தல் என்றாலே முக்கிய மாக நோக்கப்படுவது தேர்தல் விஞ் ஞாபனம்தான்.

ஒரு கட்சியின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் ஒரு முக்கிய ஆவ ணம் அது. காலம் தோறும் ஒவ் வொரு தேர்தலையும் ஒட்டி ஒரு கட்சி வெளியிட்ட பக்கம் 02 »

## மன்னார்,யாழ்.,வவுனியா முஸ்லிம்கள் புத்தளத்திலும் வாக்களிக்க ஏற்பாடு

### கொரோனாவைக் காரணம் காட்டி

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜூன் 23

மன்னார்,யாழ்ப்பாணம்,வவு னியா மாவட்டங்களில் வாக்கா ளர் பதிவுகள் உள்ள – புத்தளத் தில் வசிக்கும்–முஸ்லிம்கள் இம் முறை தத்தமது மாவட்டங்க ளுக்குரிய தமது வாக்குகளைப் புத்தளத்தில் இருந்தே அளிப்ப தற்கு ஏற்பாடு செய்யப்படவுள் ளது.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 6 ஆயிரத்து 750 வாக்கா ளர்களும், துல்லைத்தீவைச் சேர்ந்த 2 ஆயிரம் முஸ்லிம் வாக்காளர்களும் பக்கம் 02 »

## வசமாக சிக்கிக்கொண்ட கருணா சி.ஐ.டி. முன் இன்று வாக்குமூலம்!

கொழும்பு, ஜூன் 23

கருணா அம்மான் என்ற ழைக்கப்படும் முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முர ளிதரன் தான் வெளியிட்டுள்ள சர்ச்சைக்குரிய கருத்து தொடர் பில் இன்று கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு (சி.ஐ.டி.) அலுவலகத்தில் முன்னிலை யாகி வாக்குமூலம் வழங்கவுள் ளார்.

கருணாவின் சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பில் விசாரணை நடத்துமாறு குற்றப் புலனாய் வுப்பிரிவுக்குப் பதில் பொலிஸ்மா அதிபர் சீ.டி.விக்கிரமரத்ன நேற் றுக் காலை பணிப்புரை விடுத் திருந்தார். இதையடுத்துக் கரு ணாவை விசாரணைக்கு வரு மாறு குற்றப் புலனாய்வுப் பிரிவு அழைத்துள்ளது.

அதற்கமைய குற்றப் புல னாய்வுப் பிரிவு அலுவலகத்தில் முன்னிலையாகி பக்கம் 02 »

# ‘மொட்டு’வின் ஆட்சியை இருபது வருடங்களுக்கு அசைக்கவே முடியாது!

### மார்தட்டுகின்றார் மஹிந்தர்



கொழும்பு, ஜூன் 23

இலங்கையில் தற்போது நடைபெறுவது ராஜபக்ஷக்களின் ஆட்சி அல்ல; குடும்ப ஆட்சி அல்ல. இது நாட்டு மக்கள் விரும்பிய ஜனநாயக ஆட்சி. 'தாமரை மொட்டு'வின் ஆட்சி. இந்த ஆட்சியை குறைந்தது இருபது வருடங்களுக்கு எவராலும் அசைக்கவே முடியாது.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவ ரான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். பக்கம் 02 »

## இருவருக்கு கொரோனா

கொழும்பு, ஜூன் 23

இலங்கையில் இரண்டு நாள்களின் பின்னர் நேற்று இருவர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதே வேளை, மேலும் 28 பேர் குண மடைந்து பக்கம் 02 »

## நாகர்கோவிலில் மக்களை மிரட்டிய இராணுவத்தினர்

யாழ்ப்பாணம், ஜூன் 23

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியில் மோட்டார் சைக்கிள்களில் வந்த படையி னர் கைத்துப்பாக்கிகளைக் காட் டித் தங்களை மிரட்டினர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் ஆனந்தராசா சுரேஷ்குமார் பக்கம் 02 »

## விக்கியால் தமிழருக்கு என்ன செய்யமுடியும்?

### கேள்வி எழுப்புகிறார் சம்பந்தன்



கொழும்பு, ஜூன் 23

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பிலிருந்து விலகிச் சென்ற முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ் வரன் கூட்டமைப்பை விமர்சிக் கலாம். அதைவிடுத்து தமிழ் மக்களுக்கு அவரால் என்ன செய்ய முடியும்?

–இவ்வாறு கேள்வி எழுப் பியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

தனியார் பக்கம் 02 »

## கொக்குத்தொடுவாயில் சிங்களக் குடியேற்றம்!



முல்லைத்தீவு, ஜூன் 23

முல்லைத்தீவு – கொக்குத் தொடுவாய்த் தமிழ்க் கிராமங் களை அண்மித்து சிங்களக் குடி யேற்றங்கள் அமைக்கப்ப டுவதை பக்கம் 11 »

## தமிழருக்கு நியாயமான தீர்வு தரவேமாட்டார் கோட்டாபய!

### அடித்துச் சொல்கிறார் சித்தார்த்தன்



யாழ்ப்பாணம், ஜூன் 23

ஜனாதிபதி கோட்டபாய ராஜ பக்ஷ ஒரு சிறந்த சிங்கள தேசிய வாதி. அவர் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வை வழங்கு வார் என நான் நினைக்க வில்லை என்று கூறியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரும், புளொட் அமைப் பின் தலைவருமான த.சித் தார்த்தன், அவர் தரமாட்டார் என்பதற்காக நாங்கள் அமைதி யாக இருக்க முடியாது எனவும் குறிப்பிட்டார்.

சமகால அரசியல் நிலைமை கள் தொடர்பாக பக்கம் 02 »

## வாடிக்கையாளர் போன்று புகுந்து கடையில் பணம் உருட்டிய ஆசாமி

### யாழ்.நகரில் நேற்றுக் காலை சம்பவம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூன் 23.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி யில் உள்ள மாபிள் விற்பனைக் கடை ஒன்றில் நேற்றுக் காலை வாடிக்கையாளர் போன்று சென்ற ஒருவர் முதல் நாள் விற்பனைப் பணத்தைச் சுருட்டிக்கொண்டு தலைமறைவானார்.

ஸ்ரான்லி வீதியில் வின்சர் சந்திக்கும் காங்கேசன்துறை வீதிக்கும் பக்கம் 11 »

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் விஞ்ஞாபனத்தை எடுத்து உற்று நோக்குவோமானால் அந்தக் கட்சியின் செல்நெறிப்பாதை யாது என்பதை நாம் தீர்மானித்து விடலாம்.

அந்த வகையில் இப்போதைய தேர்தலில் நமது தமிழ்த் கட்சிகள் எத்தகைய தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடப் போகின்றன என்று உற்று நோக்குவது சுவாரஸியமானதாகும்.

'மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி' என்ற தனது பழைய பல்லவியை, 'புதிய மொந்தையில் பழைய கள்' போல இம்முறையும் ஈ.பி.டி.பி. வைக்கும் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு போன்றவை எல்லாம் தமிழரின் உரிமைப் போராட்ட அபிலாஷைகளைத் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் முக்கியமாகக் குறிப்பிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் அதில்தான் ஒரு சிறிய மாற்றம்.

வழமைபோல தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 'ஒரு நாடு; இரு தேசம்' என்ற கொள்கையை வலியுறுத்தி நிற்கும்.

விக்கியின் கூட்டணியும், தமிழ்க் கூட்டமைப்பும் சமஷ்டி பற்றி பேசும். எனினும் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒரு மாற்றம் இருக்கும் என்கின்றன விடயம் அறிந்த வட்டாரங்கள்.

வழக்கமாக சமஷ்டி, அரசியல் தீர்வு, தமிழர் அபிலாஷை ஆகியவை பற்றி மட்டும் இத்தகைய விஞ்ஞாபனங்களில் அதிகம் பிரபலாபிக்கும் கூட்டமைப்பு இம்முறை அவற்றுக்கு மேலதிகமாக பொருளாதார விருத்தித் திட்டங்கள் குறித்தும் விரிவாகக் குறிப்பிடும் எனத் தெரிகின்றது.

தேர்தலை ஒட்டி கூட்டமைப்புத் தலைவர்கள் பலரும் மக்கள் மத்தியில் இறங்கி வேலை பார்த்து வருகின்றார்கள். மக்களுடன் ஊடாடுகின்றனர்.

என்றோ வரப் போகின்ற தீர்வுக்காகத் தொடர்ந்து போராடிக் கொண்டு அடிப்படைப் பொருளாதார மீட்சியைக் கூடக் கவனிக்காமல் கைவிட்டு விட்டோம் என்ற ஆதங்கம் மக்கள் மத்தியில் இருப்பதைக் கூட்டமைப்புத் தலைமை இப்போது புரிந்து கொண்டுள்ளதாம்.

அத்தோடு, இப்போதைய கோட்டா – மஹிந்த அரசில் தீர்வுக்கான முன்நகர்வுகள் அதிகம் சாத்தியமற்றவை என்பது புரிந்து கொள்ளத் தக்கதே. ஆகவே தீர்வு குறித்துப் பேசி, போராடி, முரண்பட்டு, காலம் இழுபட, மக்கள் பொருளாதார நிலையில் நொந்து நுலாகி விடுவர் என்பது கூட்டமைப்புத் தலைமைக்கு இப்போது புரிகின்றது.

அதனால், இம்முறை தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒரு புறம் உரிமைக்கு –அபிலாஷைகளை எட்டுவதற்கு – போராடுவது குறித்துப் பேசிக் கொண்டு, மறுபக்கத்தில் – சமாந்தரமாக – பொருளாதார மீட்சிக்கான திட்டங்களை முன்னெடுப்பது குறித்தும் பிரஸ்தாபிக்கப்படுமாம்.

நல்ல முடிவுதான் பாருங்கோ.

★ ★ ★

என் நண்பர் ஒருவர். அவர் தமிழரா, சிங்களவரா என்று கூற முடியாது. தாய் தந்தையரில் ஒருவர் தமிழர், ஒருவர் சிங்களவர் என்று அறிந்திருந்தேன். வெள்ளவத்தையில் தமிழ்ச் சங்க மண்டபத்தில் கண்டு பழக்கம். மூன்று மொழி பாண்டித்தியம் மிக்கவர். அனைத்து மொழிப் பத்திரிகைகளும் வாசிப்பவர்.

ஏனோ தெரியவில்லை மைத்திரி விசுவாசி. அவரின் விசுவாசி என்பதை விட மைத்திரிதாசன் என்று சொல்லாம்.

மைத்திரியைப் பற்றி 'காலைக்கதிர்' இதழின் இப்பத்தியிலோ அல்லது ஆசிரிய தலையங்கங்களிலோ கிண்டல் விட்டிருந்தால் காலையில் அவரது தொலைபேசி அழைப்பை நிச்சயம் எதிர்பார்க்கலாம். உரிமையுடன் கோபித்துக் கொள்வார்.

நேற்று மாலை தொலைபேசி அழைப்பு எடுத்தார். வழமைபோல நெருக்கமான உரிமையுடன் உரையாடத் தொடங்கினார்.

*"மச்சான்... அந்த ஆளுக்கு நட்டு கழண்டுதான் போயிட்டுது..."* – என்றார் அவர். எனக்கு விளங்கவில்லை.

*"யாருக்கு?"* – என்று கேட்டேன்.

*"மைத்திரி ஐயாவுக்கு...!"* – என்றார்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அவரா அப்படிக் கூறுவது என்று எனக்குச் சந்தேகம்.

"ஏன் அப்படிக் கூறுகின்றீர்கள்?" – என்று கேட்டேன்.

*"பின்ன... என்ன மச்சான்... இந்த ஆள் இப்படி பேசுவது... நீங்கள் பார்க்கவேயில்லையா?"* –என்று கேட்டபடி தொடர்ந்தார்.

*"ஹிங்குரங்கொட தேர்தல் தொகுதியிலை சுதந்திரக் கட்சி பொம்பிளைகளின்ரை கூட்டத்திலை இன்று (நேற்று) பேசினவர். போதைப்பொருள் ஒழிப்புக்குத்தான் எடுத்த கடுமையான நடவடிக்கைகளைத் தடுக்கத்தானாம் ஈஸ்டர் தாக்குதலை நடத்தினவையள் எண்டு புதுக் கதை அவிழ்த்து விட்டிருக்கின்றார். மக்களை முட்டாள்கள் எண்டு நினைச்சுப் போட்டார் போல...!"* – என்று நீட்டி முழங்கினார் அவர்.

நான் ஒருவாறு பேசி சமாளித்து தொலைபேசியைக் 'கட்' பண்ணினேன்.

எனக்கு ஒரு விடயம் விளங்கியது. தமது வாய்ப் புசத்தலினால் கொழும்பில் தமது கடைசி ஆதாரவாளரையும் மைத்திரியார் இழந்து விட்டார் என்பதுதான் அது...!

–மின்னல்–

## தமிழருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளா சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவை எனக்கு தெரியும். அவர் ஒரு சிறந்த சிங்களத் தேசியவாதி,அவா இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வை வழங்குவார் என நான் நினைக்கவில்லை. ஆனால் அதற்காக நாங்கள் அமைதியாக இருக்கமுடியாது. சர்வதேச மட்டத்திலும் உள்ளூரிலும் பேசவேண்டும். அழுத்தங்களை கொடுக்கவேண்டும்.

இல்லாவிட்டால் பிரச்சினையே இல்லை என்றாகிவிடும். கடந்த 70 வருடங்களாக அகிம்சை வழியிலும், ஆயுதங்களாலும் எமது பக்க நியாயங்களைப் பேசி எமக்கானதைக் கேட்டதாலேயே அது இன்றும் உயிர்ப்புடன் இருக்கிறது. எனவே பேசவேண்டியது கட்டாயம். அது கோட்டாபயவாக இருந்தால் என்ன மற்றவர்களாக இருந்தால் என்ன நாம் பேசுவோம்.

அரசுடனான பேச்சுக்களில் 3ஆம் தரப்பின் மத்தியஸ்தம் தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர்,

3ஆம் தரப்பின் மத்தியஸ்தம் 1987 இல் இந்திய – இலங்கை ஒப்பந்தம் உருவாக்கப்பட்டபோது இருந்தது. 13ஆம் திருத்தச் சட்டத்தில் உள்ளதை காட்டிலும் பல விடயங்களை எமக்கு தருவதாக இந்தியாவுக்கு கூறிய ஜே.ஆர், பின்னர் அதனை செய்யவில்லை. எனக்கு நியாயமான ஒரு பயம் உள்ளது. குறிப்பாக விமல் வீரவன்ச மற்றும் உதயகம்மன்பில போன்றவர்களுடன் பேசும்போது,

அதாவது அவர்களுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்தால் 19ஆவது திருத்தச் சட்டத்தை மட்டுமல்ல 13ஆவது திருத்தச் சட்டத்தையும் இல்லாமல் செய்யலாம் என நினைக்கிறார்கள். ஆனால் 13ஆவது திருத்தச் சட்டத்தில் கைவைத்தால் இந்தியா தலையிடும் என்ற பயம் அவாகளுக்கு உள்ளது. ஜனாதிபதி இந்தியா சென்றபோது கூட தமிழர்களுக்குத் தீர்வை வழங்குங்கள் எனச் சொல்லப்பட்டுள்ளது.

ஜனாதிபதி வெளியேவந்து சொன்ன கதை வேறாக இருந்தாலும் இந்தியா சொல்லியுள்ளது. அழுத்தம் உள்ளது என்பது ஜனாதிபதிக்குத் தெரியும். எனவே நாம் கூறுபட்டால் எந்த நாடும் எமது விடயத்தில் மத்தியஸ்தம் வகிக்க விரும்பாது. அதேபோல் நாம் கூறுபட்டு நிற்பது அரசுக்கும் லாபம் – என்றார்.

இராணுவ மயமாக்கல் விடயத்தில் இந்தியாவின் கவனத்துக்குக் கொண்டு செல்வது தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர் –

இந்தியா ஒன்றே அக்கறை காட்டக் கூடிய நாடு. ஆனால் இவ்வாறான விடயங்களில் இந்தியா அக்கறை காட்டுவதும், தலையீடு செய்வதும் இந்த ஆட்சியில் தலையீடு செய்வதாக அமையும். ஆகவே அதனை அவாகள் செய்ய மாட்டார்கள். ஆனால் 13ஆவது திருத்தச்சட்டத்தை நீக்குவது போன்ற விடயங்கள் நடந்தால் இந்தியா நேரடியாக தலையிடும்.

எனவே இந்தியா இராணுவ மயமாக்கல் போன்ற விடயங்களில் தலையிட்டால் அது இந்த நாட்டின் இறையாண்மையில் தலையிடுவதாக அமையும் அதனை இந்தியா செய்யாது. கடந்த ஆட்சியில் நாங்கள் இந்தியா சென்று பேசவில்லை. ஆனால் இங்கு பேசிக் கொண்டிருந்தோம். மேலும் அந்த நேரம் இந்தியாவிடம் சென்று பேசவேண்டிய விடயங்களும் இருக்கவில்லை.

அப்படி பேசினாலும் அது இங்கு நடக்கும் விடயங்களைப் பாதிக்கும் என்பதேயாகும். காரணம் சிங்களத் தலைவர்களுடைய மனோநிலை அவ்வாறுதான் இருந்தது. குறிப்பாக ஐக்கியதேசிய கட்சியில் உள்ள சிரேஷ்ட அமைச்சர்கள் கூட அப்படியிருந்தனர். நான் ஒருமுறை உப குழுக் கூட்டம் முடிந்து வந்தபோது என்னைக் கண்ட ஐ.தே.கட்சியில் உள்ள சிரேஷ்ட அமைச்சர் ஒருவா சிங்களத்தில் கூறினார், வேலை இல்லாத வேலை பார்க்கிறீர்கள் என்று. அதுதான் அவர்களுடைய மனோநிலை. இதற்குள் இந்தியாவிடமும் முறையிட்டால் அது நடந்த முயற்சிகளை பாதித்திருக்கும். ஆனால் இந்தியா அரசை சந்திக்கும்போதெல்லாம் தங்களால் ஆன அழுத்தங்களை கொடுத்துக்கொண்டே இருந்தது – என்றார்.

## மன்னார், யாழ்.,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்றுவரை புத்தளத்தில் வாழ்கின்றனர் எனக் கண்டறியப்படும் நிலையில் இதுவரை தேர்தல்களில் வாக்களிப்பதற்காகத் தேர்தல் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்படும் போக்குவரத்து வாகனங்களில் உரியமாவட்டத்துக்கு அழைத்து வரப்பட்டு வாக்களிக்க அனுமதிக்கப்படுவர்.

இந்த நிலையில் 2020 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் கொரோனா அச்சத்தின் மத்தியில் இடம்பெறுவதால் மக்களை ஏற்றி இறக்குவதில் நெருக்கடி நிலமை ஏற்படக்கூடும் எனக் கருதியே புத்தளத்தில் வாக்களிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேநேரம் வலி. வடக்கில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் பஸ் மூலம் வலி. வடக்குக்கு அழைத்துச் செல்லப்பட்டே வாக்களிக்க அனுமதிக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## நாகர்கோவிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

நேற்று இரவு தாம் நாகர்கோவில் பகுதியில் நின்றிருந்தபோது அங்கு வந்த படையினர் தங்களை கைகளை மேலே தூக்குமாறு கைத் துப்பாக்கிகளை காட்டி மிரட்டினர் என அவர் கூறினார்

தம்மைப்போல வேறும் சிலரும் அச்சுறுத்தப்பட்டனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## விக்கியால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொலைக்காட்சியொன்றுக்கு அவர் வழங்கியுள்ள நேர்காணலில் மேலும் தெரிவித்தவை வருமாரு:–

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை யாரையும் நாம் விலக்கவில்லை. சிலர் விலகினார்கள். அதற்கான காரணத்தை அவர்கள் இதுவரை கூறவில்லை.

விக்னேஸ்வரனை நானே அரசியலுக்குக் கொண்டு வந்தேன். வடக்கு மாகாண சபைத் தேர்தலில் அவருக்கு வாக்களிக்க வேண்டும் என்று கூறியிருந்தேன். ஆனால், தற்போது அவர் என்ன செய்கின்றார்?

அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விமர்சிக்கலாம். அதைவிடுத்து அவரால் என்ன செய்ய முடியும்? கூட்டமைப்பை விமர்சிப்பவர்களினால் தமிழ் மக்களுக்கு எதையும் செய்ய முடியவில்லை.

அவர்கள் ஏன் கூட்டமைப்பில் இருந்து விலகினார்கள் என்று அவர்களிடம்தான் கேட்க வேண்டும். நாம் யாரையும் விலக்கவில்லை. அவர்களை விலகவும் சொல்லவில்லை. விலகியமைக்கான காரணம் ஒருவரும் கூறவுமில்லை – என்றார்.

## இருவருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று வீடு திரும்பியுள்ளனர்.

தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவினால் நேற்றிரவு 11 மணிக்கு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, கொரோனா வைரஸ் தொற்றியுள்ளதாக அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 1,952 ஆகக் காணப்படுகின்றது. குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 1,526 ஆக உயர்வடைந்துள்ளது.

கொரோனாவால் இதுவரை பாதிக்கப்பட்ட 1,952 பேரில் தற்போது 415 நோயாளிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 11 பேர் சிகிச்சைகளின்போது உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே வைத்தியசாலைகளில் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் 31 பேர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் அறிவித்துள்ளது.

## 'மொட்டு'வின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய ஆட்சி தொடர்பில் எதிரணியினர் வெளியிட்டு வரும் விமர்சனங்கள் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு: –

கட்சிகளுக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளினால் பிளவடைந்து – சிதறுண்டு – நிற்கின்ற எதிரணியினர் பொதுத்தேர்தல் பரப்புரைகளுக்காக எமது ஆட்சியைக் குடும்ப ஆட்சி என்றும், சர்வாதிகார ஆட்சி என்றும், இராணுவ ஆட்சி என்றும் கண்டபடி விமர்சிக்கின்றனர். இவர்களின் விமர்சனங்களுக்கெல்லாம் தேர்தலில் மக்கள் உரிய பதிலை வழங் குவார்கள்.

பொதுத்தேர்தலுடன் எதிரணி அரசியல்வாதிகள் பலரின் அரசியல் வாழ்க்கை அஸ்தமிக்கும். அதுவரைக்கும் அவர்கள் எம்மை எப்படியெல்லாம் விமர்சிக்க முடியுமோ அப்படியெல்லாம் விமர்சிக்கலாம். அவர்களின் கருத்துச் சுதந்திரத்துக்கு நாம் தடைபோட மாட்டோம். அவர்களின் விமர்சனங்கள் எல்லாம் எமக்குத் தூசி. ஏனெனில் நாட்டு மக்கள் எமக்குப் பின்னால் அணிதிரண்டுள்ளனர்.

எனது சகோதரர் ஜனாதிபதி. நான் பிரதமர். அதற்காக இந்த ஆட்சியைக் குடும்ப ஆட்சி என்று சொல்ல முடியாது. இது எமது கட்சியும் மக்களும் விரும்பிய ஜனநாயக ஆட்சி. உலகமே திரும்பிப் பார்க்கும் வகையில் எமது நாட்டை முன்னேற்றமடையச் செய்வதே எமது பிரதான இலக்கு. அந்த இலக்கை நாம் அடைந்தே தீருவோம் – என்றார்.

## வசமாக சிக்கிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குமூலம் வழங்குவதற்காக அவர் அம்பாறையிலிருந்து நேற்றிரவு கொழும்புக்குப் பயணித்துள்ளார்.

நாவிதன்வெளிப் பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றிய தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அம்பாறை மாவட்ட வேட்பாளருமான விநாயகமூர்த்தி முரளிதரன், ஆனையிறவு சண்டையில் ஒரே இரவில் 2 ஆயிரம் முதல் 3 ஆயிரம் வரையிலான இராணுவத்தினரைக் கொன்றோம்' என்று தெரிவித்திருந்தார்.

அவரின் இந்த அறிவிப்பு தெற்கு அரசியலில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள் ளது. ஆளும் மற்றும் எதிரணி உறுப்பினர்கள் கண்டனத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்தநிலையிலேயே விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தபோது தம்மால் இழைக்கப்பட்டதாகக் கருணாவால் பகிரங்கமாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை நடத்துமாறு சி.ஐ.டிக்கு பதில் பொலிஸ்மா அதிபரால் பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தது. அதற்கமைய சி.ஐ.டி. விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

# தன் தேர்தல் வெற்றிக்காக கோட்டா அரசு ரிஷாத் பதியுதீனைக் கைது செய்யத் திட்டம்

## முன்னெச்சரிக்கை விடுக்கின்றார் அமீர் அலி





இனவாதத் தீயைக் கக்கி அரசியலை செய்து கொண்டிருக்கின்ற கோட்டாபய அரசாங்கம் தேர்தல் வெற்றிக்காக எப்போது எமது தலைவர் ரிஷாத் பதியுதீனை கைது செய்யத் திட்டம் போட்டிருக்கின்றார்கள் என மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளரும், முன்னாள்இராஜாங்கஅமைச்சருமானஎம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

கோறளைப்பற்று மேற்கு மற்றும் கோறளைப்பற்று மத்தி எல்லைக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான சந்திப்பு ஞாயிற்றுக்கிழமை இரவு அவரது இல்லத்தில் இடம்பெற்ற போது அதில் கலந்து கொண்டு மேற்சொன்னவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்தில் சில சந்தர்ப்பங்களில் நான்கு தமிழ் உறுப்பினர்களும், ஒரு முஸ்லிம் உறுப்பினரும் தெரிவு செய்யப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படுகின்ற போது முஸ்லிம் காங்கிரஸிற்கோ, முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாஹ்விற்கோ வாக்களித்து ஆசனம் கிடைக்காமல் போனால் ஒன்று இல்லையென்றால் பூச்சியம் என்பதுதான் நிலைமையாகும். ஆனால் ஐக்கிய மக்கள் சக்திக்கு ஒரு வாக்களித்தால் ஒன்று இரண்டாகும் என்ற மிகச்சிறந்த சூத்திரத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் பயணிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கைகோர்க்குமாறு அனைத்து இளைஞர்களுக்கும் அழைப்பு விடுக்கின்றேன்.

கடந்த காலங்களில் ஆயிரம் ஆயிரம் எதிர்பார்ப்புகளோடு வாக்களித்த அத்தனை இளைஞர்களும் தற்பொழுது இலாபநட்டக்கணக்குகளை மனதில்கைவைத்து பார்க்க வேண்டும். கடந்த காலத்தில் உங்களுடைய கல்வியில் வளர்ச்சி ஏற்பட்டதா? உங்களுடைய வீதிகளும் பாடசாலைகளும் அபிவிருத்தி அடைந்தனவா? விளையாட்டுக் கழகங்கள் முன்னேற்றம் அடைந்தனவா?

முஸ்லிம்களுக்கு எதிரான அட்டூழியங்கள் இடம்பெற்ற பர்மா,இந்தியா போன்ற நாடுகளிலேயே முஸ்லிம் ஜனாஸாக்களைப் புதைக்க அனுமதி வழங்கியிருந்த போதும் இந்த நாட்டில் எரிக்கப்படுகின்ற அவல நிலை இருக்கும் போது, அது கிடைக்கவில்லை, இது கிடைக்கவில்லை என்று நமது சமூகம் சண்டை போட்டுக் கொண்டிருப்பதென்பது மிகவும் வேதனையான விடயம். ஒருவேளை எதிர்வருகின்ற நாடாளுமன்றத்தில் 151 கைகள் அரைமணி நேரத்தில் உயர்த்தப்பட்டால் முஸ்லிம் தனியார் சட்டம் பறிபோகின்ற நிலை வரும். அப்போது குறைந்தளவு பாதிப்புடனாவது இந்த சமூகத்தை பாதுகாக்க ஆளுமையும் அனுபவமும் கொண்ட நல்ல அரசியல் தலைவர்களை இளைஞர்கள் தெரிவு செய்ய வேண்டும்.

இனவாதத் தீயைக் கக்கி அரசியலை செய்து கொண்டிருக்கின்ற கோட்டாபய அரசாங்கம் தேர்தல் வெற்றிக்காக எப்போது எமது தலைவர் ரிஷாத் பதியுதீனைக் கைது செய்ய திட்டம் போட்டிருக்கின்றது என்ற அச்சத்தில் இருந்து கொண்டிருக்கின்ற இந்த கடுமையான சூழ் நிலையை உணர்ந்து இலங்கை வாழ் முஸ்லிம் சமூகம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸையும் தலைமைத்துவத்தையும் பாதுகாக்கின்ற மிகப்பெரிய போராட்டத்திற்குப் பதில் அளிக்கின்ற தேர்தலாக இந்த தேர்தலை பயன்படுத்த வேண்டும். இளைஞர்கள் எனக்கு என்ன கிடைத்தது என்பதை சிந்திப்பதை விட எமக்கு என்ன கிடைத்தது என்பதை அதிகம் சிந்தனை செய்து முடிவு எடுக்க வேண்டும். – என்றார்.

# மொட்டு அணியில் கருணா இல்லை!

## அக்கட்சி கைவிரிப்பு

கருணா தெரிவித்துள்ள கருத்துக்கள் புதிய விடயமல்ல, அவை ஏற்கெனவே அனைவரும் அறிந்தவை என முன்னாள் இராஜாங்க அமைச்சர் லக்ஷமன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

தேர்தல் நெருங்கும் நிலையில் கருணாவின் உரையைப் பூதாகரமாக்கி அரசாங்கம் மீது சேறு பூச முயல்கின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பொதுஜன பெரமுன வேட்பாளர் அல்லர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தான் கோவிட் 19 ஐ விட ஆபத்தானவன் என்றும், ஆனையிறவில் ஒரே இரவில் 2 ஆயிரம் முதல் 3 ஆயி ரம் படையினரை பலியெடுத்தவன் எனவும் கருணா அம்மான் அண்மையில் கூறியிருந்தார்.

இது தொடர்பில் பல் வேறு தரப்பினரும் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன் வைத்து வருகின்றனர். அவர் பொதுஜன பெர முனவில் போட்டியிடுகின் றார் எனவும் எதிரணி குற்றஞ்சாட்டியிருந்தது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன –

கருணா கூறியுள்ள விடயங்கள் அனைவருக்கும் தெரிந்தவை. இதனை எதிரணி பயன்படுத்தி அரசியல் இலாபம் பெற முயல்கிறது.– என்றார்.

இதே வேளை பொதுஜன பெரமுன கட்சியில் விநாயகமூர்த்தி முரளிதரன் போட்டியிடவில்லை எனவும் அவர் வெற்றி பெற்று நாடாளுமன்றத்திற்குள் பிரவேசித்தால், தமது கட்சிக்கு ஆதரவு அளிப்பார் எனவும் பொதுஜன பெரமுன கட்சியின் வேட்பாளர் திலும் அமுணுகம குறிப்பிட்டுள்ளார்.

கருணா அம்மான் வேறு கட்சியிலே போட்டியிடுகிறார் எனவும் அவர் பொதுஜன பெரமுனவில் களமிறங்கியுள்ளார் என விசமத்தனமான பிரசாரம் முன்னெடுக்கப்படுவதாகவும் பொது ஜன பெரமுன செயலாளர் சாகர காரியவசம் கூறியுள்ளார்.

# சுகாதார வழிகாட்டலுக்கு அமைய புதூர் நாகதம்பிரான் பொங்கல் விழா





நேற்று சிறப்பாக நடந்தேறியது

(கி.வசந்தரூபன்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க வவுனியா, புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா நேற்று சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி சிறப்பாக இடம்பெற்றது.

இதன்போது பக்த அடியார்கள் காலை முதல் தீச்சட்டி ஏந்தியும், அங்க பிரதிஷ்டை செய்தும் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றியமையுடன், பொங்கல் நிகழ்விலும் கலந்து கொண்டனர்.

400 வருடங்களுக்கு மேல் பழமையான புதுமை மிகு புதூர் நாகதம்பிரானின் அருளினைப் பெறுவதற்காக அதிகளவிலான பக்தர்கள் வருகை தந்த போதும், கொவிட் – 19 தாக்கம் காரணமாக சுகாதார நடைமுறைகளை பின்பற்றி புதூர் ஆலய உற்சவத்திற்கு 80 பேருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும் பக்தர்கள் தொகை அதிகரித்தமையால் ஒவ்வொருவருக்கும் ஒரு மணித்தியாலம் சென்று வழிபட சுகாதார பரிசோதகர்களால் தற்காலிக பாஸ் வழங்கப்பட்டது. இதனையடுத்து பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் ஆலயத்திற்கு சென்று வழிபாடுகளை மேற்கொண்டனர்.

ஆலயத்திற்கு செல்லும் பிரதான நுழைவாயில் வீதியில் பக்தர்கள் நிறுத்தப்பட்டு சுகாதார வழிமுறைகளுடன், சமூக இடைவெளி பேணி ஆலயத்திற்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

ஆலயத்திற்குள் சென்ற பக்தர்கள் புதூரில் குடிகொண்டிருக்கும் நாகதம்பிரானுக்கு பால் ஊற்றியும், பொங்கல் படைத்தும் வழிபட்டமையுடன், விசம் தீண்டியவர்களுக்கு மருந்தாகப் பயன்படுத்தப்படும் புதூர் நாகதம்பிரான் ஆலய மண்ணையும் எடுத்துச் சென்றனர்.

இதன்போது ஆலயத்தில் பொலிஸார் மற்றும் சுகாதார பரிசோதகர்கள் அதிக எண்ணிக்கையில் கடமையில் ஈடுபட்டிருந்தனர். (உ – 100)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வேறு மார்க்கம் தேட வேண்டும்

பொதுத் தேர்தலுக்குப் பின்னர் அமைக்கப் போகின்ற அரசு குறித்து ஆருடம் கூறுவது வழமையாக கஷ்டமான காரியமாக இருக்கும்.

ஆனால், இப்போது – அதுவும் கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் – அமைக்கப்போகின்ற அரசு எத்தகையதாக இருக்கும் அதில் யாரின் கை ஓங்கும் என்பவை எல்லாம் இப்போதே கூறிவிடக் கூடிய விடயங்கள்தாம்.

அவ்வளவு தூரத்துக்கு எதிரணி சிதறிப் போய்க் கிடக்கின்றது.

இப்போதைய ஆளுங்கட்சி, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பெரு வெற்றியீட்டிருக்கின்றது.

மறுபக்கத்தில் ஜனாதிபதித் தேர்தலில் ஒன்றுபட்டு நின்ற அப்போதைய ஆளுங்கட்சி இப்போது பிளந்து போயுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மையினத்தவரும், அவர்களது கட்சிகளும் ஒன்று சேர்ந்து, ஒட்டு மொத்தமாக முழு அளவில் ஆதரவு வழங்கியும் கூட அந்தத் தரப்பினால் வெல்லவே முடியவில்லை.

சுமார் ஒன்றரை மில்லியன் வாக்குகள் வித்தியாசத்தில் அத்தரப்புக்குத் தோல்வி.

இந்தச் சீத்துவத்தில், இப்போது பொதுத் தேர்தல் சமயத்தில் பிளவுபட்ட நிலையில் – பொதுத் தேர்தலில் வெல்லுவதும் ஆட்சியைக் கைப்பற்றுவதும் – அத்தரப்புக்குப் பகல் கனவன்றி வேறில்லை.

இந்தப் பின்புலத்தில் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு கோட்டபாய ராஜபக்ஷ தான் ஜனாதிபதியாக இருக்கப் போகின்றார். வரும் நாடாளுமன்றத்திலும் கூடப் பெரும்பாலும் மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராகக் கொண்ட அரசுதான் அமைவதற்கான வாய்ப்புக்கள் அதிகம்.

இதுதான் இப்போதைய களப்புற யதார்த்த நிலைமை. அத்தகைய சூழ்நிலை ஏறபட்டால் வெறுமனே ஒன்றரை டசின் எம்.பிக்களை நாடாளுமன்றத்தில் கொண்டிருக்கக் கூடிய தமிழர் தரப்பு என்ன செய்வது, தமது அபிலாஷைகளை எட்டுவதற்கான போராட்டத்தை எப்படி முற்கொண்டு செல்வது என்ற வினா எழும்புகின்றது.

நிறைவேற்றதிகாரத்தையும், வலிமையான நாடாளுமன்ற பலத்தையும் வைத்துக் கொண்டு பௌத்த, சிங்களப் பேரினவாத விஸ்வரூப எழுச்சியோடு அரசியல் காய் நகர்த்தல்களை முன்னெடுக்கப் போகின்ற கோட்டா – மஹிந்த அரசுக்கு முன்னால், அந்த அரசின் மேலாண்மை ஆதிக்கத்தை எதிர்கொள்வதற்குத் தமிழர் தரப்பு என்ன வியூகம் வகுக்கப் போகின்றது என்பதே கேள்வியாகும்.

தமிழர் தரப்பின் போரட்டப் போக்கை அல்லது போராட்டத் தளத்தை வெறுமனே நாடாளுமன்ற அரசியல் களத்தில் வைத்துக் கொண்டு, அதில் மாத்திரம் காய் நகர்த்த முடியும் என்ற சிந்தனை வறுமையில் அல்லது தந்திரோபாயத் தவறில் நாம் மூழ்கிக் கிடப்போமேயானால் நிச்சயமாக இந்தத் தேர்தலின் பின்னர் முட்டுச் சந்தில் எமது போராட்டப் பாதை அல்லது அரசியல் செல்நெறி முடங்கிப் போவது நிச்சயம்.

அறுபதுகளிலும், எழுபதுகளிலும் இப்படி நாடாளுமன்ற ஜனநாயகப் பாதையிலே – களத்திலே – தளத்திலே – எமது முயற்சி தோற்றுப் போனபோதுதான், ஆயுதப் போராட்டத் தளம் என்ற புதிய களத்தைத் திறந்தார்கள் தமிழ் இளைஞர்கள். அதற்காக இப்போதும், மீளவும், அத்தகைய பாதையை – தளத்தைத் திறக்க வேண்டும் என்பதல்ல. வேறு பாதை ஒன்றை – மார்க்கம் ஒன்றை நாம் நாட வேண்டும்.

உலக ஒழுங்கையே தலை கீழாக மாற்றும் தந்திரோபாயங்கள் – உத்திகள் – கட்டாயங்கள் இன்று கட்டவிழ்கின்றன.

பாரிய அணுகுண்டுகள், ஆயுதங்கள், படைகள், பேராற்றல்கள் செய்ய முடியாத அழிவை கண்ணுக்குத் தெரியாத – சொற்ப நாள்களே வாழக் கூடிய – அற்ப வைரஸ்கள் சாதித்துக் காட்டுகின்றன.

ஆகவே அட்சரகணித எண்ணிக்கையிலே சிறுபான்மையினரான தமிழர்களாகிய நாம் எமது அபிலாஷைகள் ஓங்கி ஒலிக்கக் கூடியதான – வலிமையாக உணர்த்தக் கூடியதான – ஒரு மார்க்கத்தைத் தேடவேண்டும்.

நாடாளுமன்றத்தில் இணக்க அரசியல் அல்லது பிணக்கு அரசியல் என்ற இரண்டு பாதைகளை மட்டும் வைத்துக் கொண்டு அரசியல் தந்திரம் பண்ணிக் கொண்டிருப்பது போதுமானது அல்ல.

அதற்கு வெளியிலும் நாம் வாய்ப்புகளை – சந்தர்ப்பங்களை – பாதைகளை – முறைமைகளைத் தேட வேண்டும். புதிய தளங்களை – களங்களைத் திறக்கவேண்டும்.

# பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கான சுகாதார ஏற்பாடு குறித்து ஒத்திகை

## நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்தது







(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜூன்23

கொரோனா அச்சத்தின் பின்பு மீண்டும் பாடசாலைகள் ஆரம்பிக்கவுள்ள நிலையில் அதற்கான சுகாதார ஏற்பாடுகள் நேற்றைய தினம் பரீட்சித்துப் பார்க்கப்பட்டது.

கொரோனா அச்சம் காரணமாக கடந்த மார்ச் 13ம் திகதி பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில் எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் அவை ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவ்வாறு ஆரம்பிக்கப்படவுள்ள பாடசாலைகளில் மேற்கொள்ள வேண்டிய கொரோனா முன் ஆயத்த நடவடிக்கைகள் ஒரு தொகுதி மாணவர்களிற்கான வழிகாட்டல் மூலம் பரீட்சித்துப் பார்க்கப்பட்டது.

பரீட்சித்துப் பார்க்கும் நிகழ்வு யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் பாடசாலை அதிபர் மகேந்திரராஜா தலைமையில் அதப் பகுதி பொதுச் சுகாதார உத்தியோகத்தர் , மருத்துவர், கல்வி அதிகாரிகள் முன்னிலையில் இடம் பெற்றது.

இதே மாதிரி நிகழ்வுகள் அதிக மாணவர்களைக் கொண்டுள்ள மேலும் சில பாடசாலைகளிலும் முன்னெடுக்கப்பட்டன.

# முகுது விகாரைக்கான காணி அளவீட்டுப் பணியை தேர்தல் முடியும் நிறுத்துமாறு நீதிமன்றம் உத்தரவு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

பொத்துவில் முகுது மகா விகாரைக்கான காணி அளவீட்டுப் பணிகளை நாடாளுமன்ற பொதுத் தேர்தல் நிறைவடையும் வரை இடைநிறுத்தி வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொத்துவில் பிரதேசத்தின் முகுது மகா விகாரைக்கான காணி தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சையையடுத்து, தொல்லியல் ஆய்வுத் திணைக்களத்தினால் பொத்துவில் நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு இன்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதிவான் எம்.எச்.முஹம்மட் றாபி இவ்வுத்தரவை பிறப்பித்துள்ளார்.

இவ்வழக்கு விசாரணையில் எதிரிகளான குடியிருப்பாளர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர், சிரேஷ்ட சட்டத்தரணி ஆரிப் சம்சுதீன் மற்றும் சட்டத்தரணி முஹம்மட் கதீர் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

இதன்போது, குறித்த காணி தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரமும் தொல்லியல் ஆய்வுத் திணைக்களத்தினால் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் படியும் 30 ஏக்கர் காணியை மாத்திரமே அளவீடு செய்வதற்கு அத்திணைக்களத்திற்கு அதிகாரம் உள்ளது என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர், அதனை அளவீடு செய்த பின்னர் அது தொடர்பிலான அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் இந்த 30 ஏக்கர் காணிக்குள் கட்டடம் அமைப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள 13 குடியிருப்பாளர்களும் இல்லையென்று ஊர்ஜிதமாகும் பட்சத்தில் அவர்கள் தமது இடங்களில் கட்டட நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

அதேவேளை 30 ஏக்கர் காணிக்குள் குறித்த குடியிருப்பாளர்களுக்கு ஜயபூமி காணி உறுதிப் பத்திரம் வழங்கப்பட்டிருப்பதனால், சட்டபூர்வமாகவே அவர்கள் அங்கு குடியிருக்கிறாரகள் என்றும் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் சுட்டிக் காட்டினார்.

இந்த வழக்கைப் பொறுத்தவரையில், தொல்லியல் ஆய்வுத் திணைக்கள உத்தியோகத்தர்களோ பொலிஸாரோ குறித்த இடத்திற்கு சென்று, மக்களுக்கு மத்தியில் தேவையற்ற பதற்றத்தை ஏற்படுத்துகின்ற செயற்பாட்டை இத்தேர்தல் காலம் முடியும் வரை செய்யக்கூடாது என்றும் அவர் அழுத்தமாக கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து, தொல்லியல் ஆய்வுத் திணைக்களத்தின் சார்பில் வருகை தந்திருந்த உத்தியோகத்தர்களிடம் இவ்விவகாரம் தொடர்பில் நீதிவான் விளக்கம் கோரினார்.

எதிரிகள் சார்பான சட்டத்தரணியினால் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்கள் சரி என்றும் ஏற்கனவே 30 ஏக்கர் காணி அளவீடு செய்யப்பட்டிருப்பதாகவும் வரைபடங்களை வரைவதற்காக அரசாங்க நில அளவீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளதாகவும் தொல்லியல் ஆய்வுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் விளக்கமளித்தனர்.

இதனை ஏற்றுக் கொண்ட நீதிவான், இது சம்மந்தமான அறிக்கை நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு, சர்ச்சைக்குரிய குடியிருப்பிடங்கள் முகுது மகா விகாரைக்கான 30 ஏக்கர் காணிக்குள் இருக்கின்றனவா, இல்லையா என்பதைத் தீர்மானித்த பின்னர், குடியிருப்பாளர்களை வெளியேற்றுவதா அல்லது அவர்களது கட்டட நிர்மாணத்திற்கு அனுமதிப்பதா என்பது தொடர்பில் முடிவு செய்யப்பட்டு, இவ்வழக்கு முடிவுக்கு கொண்டு வரப்படும் என்று அறிவித்தமையுடன் அது வரையில், இத்தேர்தல் காலத்தில் அப்பகுதிக்கு சென்று, மக்கள் பதற்றமடையும் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டாம் என்றும் உத்தரவிட்டார்.

இவ்வழக்கின் அடுத்தகட்ட விசாரணை எதிர்வரும் ஓகஸ்ட் 05 ஆம் திகதி இடம்பெறும் என நீதிவான் அறிவித்தபோது, அது தேர்தல் தினமென்று சுட்டிக்காட்டப்பட்டது. இத்திகதி, தேர்தல் ஆணையாளரின் அறிவிப்புக்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டதால், அடுத்த அமர்வு குறித்து பின்னர் பரிசீலிக்கப்படும் என்று குறிப்பிட்டு நீதிவான் வழக்கு விசாரணையை ஒத்திவைத்தார்.

பொத்துவில் முகுது மகா விகாரைக்கான காணியில் குடியிருப்போர் சட்டவிரோத கட்டடங்களை அமைக்கின்றனர் என்று குற்றஞ்சாட்டி கடந்த 2019 நவம்பர் மாதம் தொல்லியல் ஆய்வுத் திணைக்களத்தினால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ்வழக்கு எதிர்வரும் ஓகஸ்ட் 05 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படவிருந்த நிலையில் கடந்த வாரம் அப்பகுதியில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையையடுத்து, விடுக்கப்பட்ட முன்நகர்த்தல் மனு ஏற்றுக் கொள்ளப்பட்டே இவ் விசாரணை இன்று திங்கட்கிழமை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பலமான பேரம் பேசும் வாய்ப்புக்களை தவறவிட்டுவிட்டு மீண்டும் பேரம் பேசுவதற்கு சக்தியைக் கோருகின்றனர்

## கிளிநொச்சிக் கூட்டத்தில் சந்திரகுமார் விசனம்





தமிழ் மக்களால் பல தடவைகள் பல தேர்தல்களில் வழங்கப்பட்ட பலமான பேரம் பேசுகின்ற வாய்ப்புக்களை எல்லாம் வீணடித்துவிட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மீண்டும் தமிழ் மக்களிடம் பேரம் பேசும் சக்தியைத் தமக்கு வழங்குமாறு கோருவது என்பது மீண்டும் மீண்டும் தமிழ் மக்களை ஏமாற்றும் செயல் என யாழ் மாவட்டத்தில் சுயேச்சைக் குழு ஐந்தில் தேர்தல் போட்டியிடுகின்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி அம்பாள்குளத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

மீள்குடியேற்ற ஆரம்ப காலத்தில் மக்கள் எதுவுமற்றவர்களாக எதுவும் இல்லாத பிரதேசங்களில் மீள்குடியேறிய போது நாம் அந்த மக்களிடம் அரசியல் செய்யவில்லை. நான் அந்தக் காலத்தில் மக்கள் மத்தியில் அரசியல் செய்திருந்தால் அடுத்த 2015 தேர்தலிலும் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினராக இருந்திருப்பேன். ஆனால் நான் அக்காலத்தில் மக்களின் அவலத்தில் அரசியல் செய்ய விரும்பவில்லை. மாறாக கையில் பைகளுடன் மீள்குடியேறிய மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டுவரும் நடவடிக்கைகளில் ஈடுபட்டோம். அழிந்து கிடந்த பிரதேசத்தை மீள கட்டியெழுப்ப கடுமையாக உழைத்தோம். கல்வி, பொருளாதாரம் எனப் பல துறைகளில் எமது பிரதேசங்களைக் கட்டியெழுப்பினோம் அதன் விளைவே 2011 தொடக்கம் 2015 வரையான காலப்பகுதிக்குள் கிளிநொச்சி மாவட்டம் துரித அபிவிருத்தி அடைந்த மாவட்டமாக மாறியது.

அதன் பின் இந்த மாவட்டத்தில் எதுவுமே நடக்கவில்லை. மக்கள் வெறுமைக்குள் இருந்தார்கள். தங்களது பிரச்சினைகள், தேவைகளைத் தீர்த்துக்கொள்ள முடியாது துர்ப்பாக்கிய நிலைக்குள் தள்ளப்பட்டிருந்தார்கள்.

அரசின் பங்காளிகளாக ஒவ்வொரு வரவு - செலவுத்திட்டத்திற்கும், நம்பிக்கையில்லாப் பிரேரணைகளுக்கும் அரசுக்குச் சார்பாகக் கைகளை உயர்த்தியவர்கள் மக்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்கு மறந்துவிட்டார்கள். மாறாக தங்களின் சொந்த வாழ்க்கையைப் பலமாக்கிக்கொண்டார்கள். கடந்த நல்லாட்சி என்று சொல்லப்படுகின்ற ஆட்சியில் தமிழ் மக்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குப் பேரம் பேசும் சக்தியை வழங்கியிருந்தார்கள். ஆனால் அந்தப் பேரம் சக்தியால் தமிழ் மக்களுக்கு என்ன நன்மை ஏற்பட்டது? தமிழ் மக்கள் கடந்த காலங்களை ஒப்பிட்டு நோக்கிச் சிந்தித்துத் தங்களின் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யவேண்டும். - எனத் தெரிவித்தார்.

# வேட்பு மனுக்கள் நிராகரிப்புக்கு எதிரான ஞானசாரர் தரப்பின் முறையீடு நிராகரிப்பு

## மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முடிவு



எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காகக் கொழும்பு, களுத்துறை, மொனராகலை மற்றும் குருநாகல் மாவட்டங்களில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராகப் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலர் கல கொட அத்தே ஞானசார தேரர் உட்பட சிலர் தாக்கல் செய்த மனுக்களை மேன் முறையீட்டு நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

'எமது மக்கள் சக்தி' என்ற கட்சியின் சார்பில் வேட்பாளர்களாகப் போட்டியிடும் நோக்கில் தாக்கல் செய்த வேட்புமனுக்களை நிராகரித்து தெரிவத்தாட்சி அதிகாரிகள் எடுத்த தீர்மானத்தை இரத்துச் செய்யுமாறு கோரி ஞானசார தேரர் உள்ளிட்டோர் இந்த மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த நான்கு மனுக்களை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான எம்.எச்.எம்.டி. நவாஸ், சோஹித ராஜ கருண ஆகியோர் அடங்கிய ஆயம் விசாரணைக்கு எடுத்துக்கொண்டது.

மனுவை நிராகரித்த நீதியரசர்கள், தேர்தல் சட்டத்தின் 19ஆவது சரத்திற்கு அமைய சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அதிகாரிகள் செயற்பட்டுள்ளனர் எனவும் வேட்புமனுக்கள் கையளித்த போது அவை நிராகரிக்கப்பட்டிருந்தால், வேட்பாளர்களுக்கு எதிர்ப்புகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் இருந்ததாகவும், இதனால், இந்த மனுக்களை விசாரணைக்கு எடுக்க முடியாது எனவும் அவற்றை நிராகரிப்பதாகவும் தெரிவித்தனர்.

# நீர்வேலியில் ஹயஸ் விபத்து அதில் இருந்தோர் அருந்தப்பு



பருத்தித்துறை, ஜூன் 23

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ஹயஸ்வானின் டயர்வெடித்ததில் அந்த வான் வீதியை விட்டு விலகித் தென்னைமரத்துடன்மோதிக்காணிக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது. இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் நீர்வேலி கந்தசுவாமி கோயிலுக்கு அண் மையில் இடம்பெற்றது.

வானில் பயணித்தவர்கள் காயங்கள் இன்றித் தப்பித்தனர். வான் கடுமையாகச் சேதமடைந்துள்ளது.

டெலிகொம்மிற்கு சொந்தமான இந்த வான் அம்பாறையில் இருந்து வருகை தந்ததாகக் கூறப்படுகிறது.




# அழகக சங்க சமாசத்தினருடன் கூட்டமைப்பினர் நேற்றுப் பேச்சு

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ் மாவட்ட அழகக சங்கங்களின் சமாசத்தினருக்கும் கூட்டமைப்பினருக்குமான சந்திப்பு நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழரசுக்கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில் யாழ்மாவட்ட வேட்பாளர்களான மாவை சேனாதிராசா, த.சித்தார்த்தன், பா.கஜதீபன், இ.ஆனல்ட் ஆகியோருடன் வடமாகாண அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானமும் கலந்துகொண்டார்.

இச்சந்திப்பில் தற்போதைய அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பாக வேட்பாளர்களால் அழகக சங்க சமாச நிர்வாகத்தினருக்குத் தெளிவுபடுத்தப்பட்டது. சமாசத்தினரின் கோரிக்கைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

காலைக்கதிர் Kalaikkathir

# மோடியை கடிந்தார் மன்மோகன் சிங்!



இந்தியப் பிரதமர் மோடி தனது வார்த்தைகளையும் அறிவிப்புகளையும் வெளியிடும் போதும் பயன்படுத்தும் போதும் அதன் விளைவுகளையும், தேசப் பாதுகாப்பு, எல்லைப்புற நலன் ஆகிய வற்றையும் மனதில் வைத்துப் பேச வேண்டும்.

சீனா தனது நிலைப்பாட்டை உறுதிப்படுத்த அனுமதிக்கக்கூடாது என்று இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் கண்டனம் தெரிவித்துள்ளார். இந்தியா, சீனா எல்லையில் நடந்த மோதல் தொடர்பாக முதல்முறையாக மன்மோகன் சிங் தனது கருத்தைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: –

எங்களை வழிநடத்தும் பதவியில் இருப்பவருக்கு மிகப்பெரிய பொறுப்பும், கடமையும் இருக்கிறது. நம்முடைய ஜனநாயகத்தில் பிரதமர் அலுவலகத்துக்குப் பொறுப்பு இருக்கிறது. கல்வான் பள்ளத்தாக்குப்பகுதியில் உள்ள இந்தியப் பகுதிகளை சீனா அப்பட்டமாக, சட்ட விரோதமாக உரிமை கொண்டாடுகிறது.

நம்முடைய எல்லைப்புற இறையாண்மையில் ஒருபோதும் சமரசம் செய்து கொள்ள முடியாது. சீனா தனது நிலைப்பாட்டை உறுதிப்படுத்திக்கொள்ளும் வார்த்தையைப் பயன்படுத்தப் பிரதமர் மோடி அனுமதித்திருக்கக்கூடாது என்றார்.

# முருகனுடன் பேசுவதற்கு அனுமதி மறுப்பது ஏன்?

## தமிழக அரசிடம் நீதிமன்றம் கேள்வி

வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள முருகனைச் சந்தித்துப் பேசுவதற்கு நளினிக்கு அனுமதி மறுப்பது ஏன் எனக் கேள்வி எழுப்பியது சென்னை உயர் நீதிமன்றம். இந்தக் கேள்விக்கு ஒரு வாரத்தில் பதிலளிக்க வேண்டும் என்றும் தமிழக அரசுக்கு உத்தரவிட்டது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் கைதிகளாகச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள நளினி மற்றும் முருகன் ஆகிய இருவரும், சிறை விதிகளின்படி 15 நாள்களுக்கு ஒருமுறை சந்தித்துப் பேச அனுமதி உண்டு. ஆனால், கடந்த மூன்று மாதங்களாக நளினியையும், முருகனையும் சந்தித்துப் பேச சிறையில் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதனால் சிறையில் முருகன் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாகவும், அவருக்குத் தேவையான மருத்துவ சிகிச்சை வழங்க வேண்டும் எனவும், நளினியும் முருகனும் சந்தித்துப் பேச அனுமதி வழங்கக் கோரியும் நளினியின் தாய் பத்மா சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார். இந்த மனு விசாரணைக்கு வந்த போதே நீதிமன்றம் இவ்வாறு கேள்வி எழுப்பியது.



# பாகிஸ்தான் தாக்குதல் இந்தியச் சிப்பாய் சாவு!

இந்தியா – பாகிஸ்தான் இடையுள்ள காஷ்மீர் எல்லையில் பாகிஸ்தான் இராணுவம் நடத்திய தாக்குதலில் இந்தியச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். நேற்றுக் காலை ஜம்மு காஷ்மீரின் புஞ்ச் மற்றும் ரஜோரி மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளில் பாகிஸ்தான் இராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்திய இராணுவம் பதில் தாக்குதல் நடத்தி வந்தாலும் ரஜோரி மாவட்டத்தில் நடந்த மோதலில் இந்தியாத் தரப்பில் ஒரு சிப்பாய் உயிரிழந்தார். பாகிஸ்தான் இராணுவம் எல்லை தாண்டி நடத்திய தாக்குதலில் இந்த இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்டார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

# சீனா – இந்தியா நேற்றுப் பேச்சு

லடாக்கில் கல்வான் பள்ளத்தாக்குப் பகுதியில் நடந்த மோதல் தொடர்பாக சீனா மற்றும் இந்தியா இடையில் இராணுவ உயர் மட்டத்திலான பேச்சுகள் நேற்று நடந்தன. எல்லை மோதலில் இந்தியச் சிப்பாய்கள் 20பேர் கொல்லப்பட்டதையடுத்து இந்தியா தனது இராணுவத்தையும் சீனா தனது இராணுவத்தையும் எல்லைப் பகுதியில் குவித்து வருகின்றன.

இந்த நிலையில் எல்லைப் பிரச்சினைக்கு அமைதியான வழியில் தீர்வு காண்பதற்குரிய பேச்சும் நடந்து வருகிறது.

இதன்படி இவ்விரு இராணுவ உயர்; மட்டத்திலான பேச்சுகள் சில நேற்று மோல்டோவில் நடந்தன. இதில் விவாதிக்கப்பட்ட விடயங்கள் குறித்த தகவல்கள் எவையும் வெளியாகவில்லை.

# சாதிக் கொலைக் குற்றவாளிகளுக்கு விடுதலையும் தண்டனைக் குறைப்பும்



இந்தியாவின் உடுமலையைச் சேர்ந்த சங்கர் கொலை விவகாரத்தில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட ஐந்து பேரின் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டுள்ளது. முக்கிய குற்றவாளியான சின்னச்சாமி என்பவர் விடுவிக்கப்பட்டார்.

ஏற்கனவே அளிக்கப்பட்ட மாவட்ட நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்துக் குற்றவாளிகள் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்ட நிலையில் இன்று தீர்ப்பளிக்கப்பட்டது. இந்தத் தீர்ப்பில் முதல் குற்றவாளியான சின்னச்சாமியின் தூக்குத் தண்டனை நீக்கப்பட்டு, அவர் விடுவிக்கப்பட்டார். மற்றைய ஐந்து குற்றவாளிகளின் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. இவர்களுக்கு எந்த தளர்வும் அளிக்கக்கூடாது என்றும் இவர்கள் குறைந்தது 25ஆண்டுகள் சிறையில் இருக்க வேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

### நடந்தது என்ன?

திண்டுக்கல் மாவட்டம் பழனியைச் சேர்ந்த கௌசல்யா என்பவர் தன்னுடன் படித்த தலித் இளைஞரான சங்கர் என்பவரை 2015ஆம் ஆண்டு பெற்றோரின் எதிர்ப்பை மீறித் திருமணம் செய்தார். 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13ஆம் திகதியன்று கௌசல்யாவும் அவரது கணவர் சங்கரும் உடுமலைப்பேட்டை பேருந்து நிலையத்திற்கு அருகில் வைத்து மோட்டர் சைக்கிளில் வந்த நபர்களால் கத்திகளால் வெட்டப்பட்டனர். இதில் படுகாயமடைந்த சங்கர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார். தலையில் வெட்டுக்காயமடைந்த கௌசல்யா சிகிச்சைபெற்றுக் குணமடைந்தார். பட்டப்பகலில் நடந்த இந்தக் கொலைச் சம்பவம் அங்குள்ள மறைகாணிகளில் பதிவாகியிருந்தது. இதையடுத்து, கௌசல்யாவின் பெற்றோர் சின்னச்சாமி மற்றும் அன்ன லட்சுமி உள்ளிட்ட 11 பேர் கைது செய்யப்பட்டு வழக்கு விசாரணை நடைபெற்றது.

தந்தை சின்னச்சாமி, தாய் அன்னலட்சுமி, தாய்மாமன் பாண்டித்துரை ஆகிய மூவரும் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டனர். வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழும் வழக்குப் பதிவுசெய்யப்பட்டது. இந்த வழக்கு திருப்பூர் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு 2017ஆம் ஆண்டில் தீர்ப்பளிக்கப்பட்டது. அந்தத் தீர்ப்பில், கௌசல்யாவின் தாய் அன்னலட்சுமி, அவருடைய தாய்மாமன் பாண்டித்துரை, பிரசன்னா ஆகிய மூவரும் விடுவிக்கப்பட்டனர்.

மீதமிருந்த 9 பேரில் கௌசல்யாவின் தந்தை சின்னச்சாமி, ஜெகதீசன், மணிகண்டன், செல்வக்குமார், கலை தமிழ்வாணன், மதன் என்ற ஆகிய 6 பேருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. ஸ்டீபன் தன்ராஜுக்கு இரட்டை ஆயுள் தண்டனையும் மணிகண்டனுக்கு 5 ஆண்டு சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. இதில் சின்னச்சாமிக்கு தூக்குத்தண்டனையோடு பத்து ஆண்டு கடுங்காவல் தண்டனையும் 3 லட்ச ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. இந்த நிலையில் மேல் முறையீட்டில் தந்தை விடுவிக்கப்பட்டுள்ளார்.

# சோனம் கபூர் மீது விமர்சனம்



*பொலிவூட் நடிகை சோனம் கபூர் கீச்சகத்தில் பதிவிட்ட கருத்துக்கு சமூகவலைதளத்தில் கடும் விமர்சனங்கள் குவிந்தன.*

*பிரபல நடிகர் அனில் கபூரின் மகள்தான் சோனம் கபூர். 2007ஆம் ஆண்டு அறிமுகம் ஆனார். 'சாவரியா' அவரது முதல் படம் தோல்வி அடைந்தது. ஆனந்த் அகுஜா என்ற பிரபல தொழிலதிபரை மணந்துள்ளார்.*

*நடிகர் சுஷாந்த் சிங் ராஜ்புத் சாவுக்குப் பிறகு, பொலிவூட்டில் தெரிந்தவர்களுக்கு மட்டும் முன்னுரிமை அளிக்கப்படுவது குறித்த பேச்சுக்கள் அதிகரித்துள்ள நிலையில் பொலிவூட்டில் தயாரிப்பாளர்கள் புகழ்பெற்ற நடிகர், சினிமா பிரபலங்கள் விமர்சனத்துக்குள்ளாகி வருகின்றனர்.*

*சில பிரபலங்கள் தமது கீச்சகப் பக்கத்திலிருந்து விலகியுள்ளனர். இந்த நிலையிலேயே பிரபல்யப் பின்னணியைக் கொண்ட சோனம் கபூர் கடும் விமர்சனங்களுக்குள்ளாகியுள்ளார்.*

# நீதிமன்றத் தீர்ப்பு ஏமாற்றமளிக்கிறது



## திருமாவளவன் ஆதங்கம்

சாதிக் கொலை தொடர்பாக உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு ஏமாற்றம் அளிக்கின்றது என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின்தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது: தமிழ்நாட்டை மட்டுமின்றி இந்தியா முழுவதையுமே அதிர்ச்சிக்குள்ளாக்கிய உடுமலைப்பேட்டை சங்கர் ஆணவப் படுகொலை வழக்கில் இன்று சென்னை உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு ஏமாற்றம் அளிக்கிறது.

அரச தரப்பு இந்த வழக்கைச் சரியாக நடத்தாததே இதற்குக் காரணம். இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்படும் எனத் தமிழக அரசின் சார்பில் சொல்லப்பட்டிருப்பது ஆறுதல் அளிக்கிறது என்றபோதிலும் உச்ச நீதிமன்றத்திலாவது குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக்கொடுப்பதற்கு அரச தரப்பு அக்கறை காட்ட வேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம் என்றார்.

# சீனாவில் நாய் இறைச்சித் திருவிழா கொரோனாவுக்கு மத்தியில் கோலாகலம்





சீனாவின் வுஹான் நகரில் கொரோனா வைரஸ் ஆரம்பித்த நிலையில் அதன் இரண்டாவது அலை சீனாவின் தலைநகர் பீஜிங்கில் ஆரம்பித்துள்ளது.

இந்த நிலையில், சீன அரசின் கோரிக்கைகளை மீறிச் சீனாவில் நாய் - இறைச்சிக் கண்காட்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சீனாவின் தென்மேற்கு நகரமான யூலினில் ஆண்டுதோறும் 10நாள்கள் வரை நடைபெறும் இந்தக் கண்காட்சி நிகழ்வு ஆயிரக்கணக்கான பார்வையாளர்களை ஈர்க்கின்ற பெரியதொரு திருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வருவதாகவும் இந்த முறை கொரோனாத் தாக்கத்துக்கு மத்தியிலும் அது கொண்டாடப்படுகின்றது என்றும் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஆனால் இந்த ஆண்டில் சிறிய மாற்றமாகப் பார்வையளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கொரோனாவுக்கு மத்தியில் மட்டுமன்றி வனவிலங்கு வர்த்தகத்தைத் தடை செய்வதற்கும் செல்லப்பிராணிகளைப் பாதுகாப்பதற்கும் சீனா அரசு புதிய சட்டங்களை உருவாக்கி வரும் நிலையிலும் இந்தத் திருவிழா முன்னெடுக்கப்படுகிறது.

வுஹான் நகரில் உள்ள இறைச்சிச் சந்தையில் தோன்றியதாகக் கருதப்படும் கொரோனா வைரஸ், சீனர்களின் விலங்குகளுடனான தொடர்பு, உணவுப் பழக்கம் குறித்து உலகுக்கே பெரியதொரு அச்சுறுத்தலை விடுவித்துள்ள நிலையில் சீனர்கள் இந்த நாய் இறைச்சித் திருவிழாவைக் கொண்டாடுகின்றனர் என்று விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

## 2ஆவது அலை உச்சம்

பீஜிங், ஜூன் 22

சீனாவின் தலைநகர் பீஜிங் கில் கொரோனாத் தொற்றின் 2 ஆவது அலை பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது.

அங்கு புதிதாக 18 பேருக்கு நேற்றுக் கொரோனா வைரஸ் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று அந்த நாட்டின் தேசிய சுகாதார அமைப்பு தெரிவித்தது.

இதனால் பீஜிங்கில் கொரோனா வைரஸைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் சீனா அரசு தீவிரமாக இறங்கி உள்ளது. பரிசோதனையை அதிகப்படுத்தியுள்ள சீன அரசு, இதுவரை 22இலட்சத்து 90 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களுக்குப் பரிசோதனையை நடத்தியுள்ளது.

அத்தோடு பீஜிங்கில் பன்னாட்டு குளிர்பான நிறுவனமான 'பெப்சி'யின் கிளையில் பணியாற்றும் ஊழியர்கள் சிலருக்குக் கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டதையடுத்து அந்த நிறுவனத்தின் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

கடந்த 11ஆம் திகதியில் இருந்து 20ஆம் திகதி வரை 22 லட்சத்து 90 ஆயிரம் பேருக்குக் கொரோனா பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. அங்குள்ள உணவுச் சந்தைகளில் கொரோனாத் தாக்கம் உணரப்பட்ட நிலையில், குறிப்பாக, உணவு விநியோக நிறுவனங்கள், உண வகங்கள் ஆகியவற்றின் ஊழியர்களைக் குறிவைத்தே அங்கு பரிசோதனை நடத்தப்படுகிறது.



சீனாவின் யூலின் நகரில் நடைபெற்ற நாய் இறைச்சித் திருவிழாவின் போது நாய் இறைச்சியை விற்கும் விற்பனையாளரிடம் பேசும்போது ஒரு நபர் தனது செல்ல நாயுடன் நடந்து செல்கிறார்.

## சிரியா மீதான தடை குறித்து குர்திஷ்கள் - அமெரிக்கா பேச்சு

சிரியா அரசைக் குறிவைத்து அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடைகளிலிருந்து விலக்கு அளிப்பது தொடர்பாக குர்திஷ் தலைமையிலான அதிகாரிகள் அமெரிக்கா தலைமையிலான கூட்டணியிலமைந்த தங்கள் இராணுவ நட்பு நாடு களுடன் பேச்சு நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போரை நிறுத்தி அரசியல் தீர்வொன்றை ஏற்றுக் கொள்ள வலியுறுத்திச் சிரியா ஜனாதிபதி அல் – அசாத்துக்கு அழுத்தம் கொடுக்கும் விதமாகக் கடந்த வாரம் அமெரிக்கா பொருளாதாரத் தடைகளைச் சிரியா மீது விதித்தது.

இந்த நிலையிலேயே குர்திஷ் தலைமையிலான போராளிகளால் கட்டுப்படுத்தப்படுகின்ற வடகிழக்குச் சிரியாவில் இந்தப் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டன. சிரியாவில் நிலைகொண்டிருந்த ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளை அழிப்பதற்கு அமெரிக்கா தலைமையிலான கூட்டணியுடன் இணைந்து குர்திஷ்கள் போரிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிறேசிலில் கொரோனா சாவு 50 ஆயிரத்தைத் தாண்டியது

பிறேசிலில் கொரோனாத் தொற்றால் கடந்த 24 மணி நேரத்தில் 640 பேர் சாவடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து பிறேசிலில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 50ஆயிரத்த 617 ஆக அதிகரித்தது. இதுகுறித்துப் பிறேசில் சுகாதார அமைச்சகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பிறேசிலில் கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் கொரோனாவால் 640 பேர் சாவடைந்தனர். இதைத் தொடர்ந்து பிறேசிலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 50ஆயிரத்து 617 ஆக அதிகரித்துள்ளது. மேலும் பிறேசிலில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மட்டும் 17ஆயிரத்து 400 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அங்கு இதுவரை 10இலட்சத்து 86 ஆயிரத்து 990 பேர்வரை பாதிக்கப்பட்டுள்ளதாகப் பதிவுச் செய்யப்பட்டுள்ளது என்றுள்ளது.

அமெரிக்காவுக்கு அடுத்து கொரோனா பாதிப்பு மற்றும் இறப்பு எண்ணிக்கையில் பிறேசில் இரண்டாவது இடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

## அமெ.வின் இறைச்சிக்கு தடை விதித்தது சீனா

சீனாவின் தலைநகர் பீஜிங்கில் கொரோனாத் தொற்றுப் பரவல் அதிகரித்து வரும் சூழலில், அமெரிக்காவிலிருந்து இறக்குமதியாகும் கோழி இறைச்சிக்குச் சீனா தடை விதித்துள்ளது.

அமெரிக்காவில் இயங்கும் டைசன் உணவு உற்பத்தி நிறுவனத்தில் பணிபுரிந்த ஊழியர்கள் பலருக்கு அண்மையில் கொரோனா உறுதிப்படுத்தப்பட்டதையடுத்தே அந்த நிறுவனத்திலிருந்து ஏற்றுமதியாகும் இறைச்சிக்குச் சீனா தடை விதித்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இந்த நிலையில் உணவுப் பொருள்களிலிருந்து கொரோனா வைரஸ் பரவுவதற்கு ஆதாரம் ஏதும் இல்லை என்று டைசன் நிறுவனம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்கா – ரஷ்யா வியன்னாவில் பேச்சு!



வியன்னா, ஜூன் 22

அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான அணு ஆயுதப் பேச்சுகள் நேற்று ஆஸ்திரியாவின் தலைநகர் வியன்னாவில் தொடங்கின.

இதில் அமெரிக்கா, ரஷ்யா நாடுகளின் தூதர்கள் சந்தித்துப் பேசினர். ஆயுதக் கட்டுப்பாடு பற்றி அதிகாரபூர்வமாக எதுவும் பேசப்படவில்லை என்று இவர்களுடைய பேச்சு முடிவில் தெரியவந்தது. இவ்விரு நாடுகளும் அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதில் வரம்புகளை விதிக்கின்ற ஒப்பந்தம் ஒன்றை உருவாக்குவதற்கு இந்தப் பேச்சுகளின் முடிவில் வழி ஏற்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



- ரமேஷ் பிரியா -

# கொரோனா நெருக்கடியும் நிலைதடுமாறுகின்ற தமிழ் மாணவர் கல்வியும்

கொரனாவின் வருகையுடன் சென்ற மார்ச் மாத இறுதியிலிருந்து இன்று வரை சமூக இடைவெளியைக் கட்டாயமாகப் பேணும் நோக்குடன் நாட்டிலுள்ள சகல பாடசாலை களும் மூடப்பட்டன. கொரனாவின் வீரியம் அதிகரிக்க அதிகரிக்கப் பாடசாலைகளை மீண்டும் திறப் பதில் நீண்ட தாமதம் ஏற்படும் என எதிர்பார்க்கப்பட் டது. இதனால் நாற்பது இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களின் கல்வி மற்றும் பொதுப் பரீட்சைகளுக்கான ஆயத்தம், குறிப்பாக பாடத்திட்டங்களைக் கற்பித்து முடித்தல் போன்ற விடயங்களில் தீவிர அக்கறை செலுத்தப்பட்டது. இதன் காரணமாக மத்திய கல்வி அமைச்சும் தேசிய கல்வி நிறுவகமும் இணைந்து நவீன தொழில்நுட்பத்தின் உதவியு டன் சில புத்தாக்கங்களை அறிமுகம் செய்தன.

மிகப் பிரதானமாகத் தொலைக்காட்சியைப் பயன்படுத்திப் பரீட்சை நோக்கில் பாடத்திட்டத்தைக் கற்பிக்கும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில் இவ்வாறான முயற்சிகளை மேற்கொண்டு பாடங்களை நடத்தி வருவது ஒரு சிறப்பான அம்சம் என்றால் மிகையில்லை.

எவ்வாறெனினும், பல்வேறு பாடங்களைக் கற்பிக் கும் செயற்பாட்டில் ஏராளமான முயற்சிகள் தனியார் போதனை நிலையங்கள் மற்றும் தனிப்பட்ட ஆசிரியர்களினாலும்மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இவ்வா றான கற்பித்தல் முறைகளில் உள்ள நவீன தொழில்நுட்ப அம்சங்கள் ஒருபுறமிருக்க, இதில் ஈடுபட்டுள்ள வர்களுக்கு நீண்டகால அனுபவமும், பயிற்சியும் இல்லாத காரணத்தினால் சில குறைபாடுகளும் எழுந் துள்ளன. முழு நாட்டிற்கும் உரிய மாணவர்களுக் குக் கற்பிக்கும் போது இந்த அம்சம் அதிக முக்கியத்து வத்தைப் பெறுகின்றது. இச்செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள அனுபவமிக்க சில ஆசிரியர்கள் சிறப்பான பங்களிப் பையும் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. ஆயி னும், சகல ஆசிரியர்களும் அத்தகைய ஒரே பாங் கான ஆற்றல் மிக்கவர்களாகத் தெரியவில்லை.

இதில் இன்னொரு விடயம் அரசாங்க ஏற்பாடுகளை முன்னோடியாகக் கொண்டு தனியார் தொலைக்



காட்சிகளும் தனிப்பட்ட ஆசிரியர்களும் கூட இத்தகைய தொலைக்காட்சிச் செயற்பாட்டில் ஈடுபடுவதாகத் தெரிகின்றது.

இதன் காரணமாகப் பல தரப்பட்ட ஆற்றல், அனுபவம், தகுதி என்பவற்றில் வேறுபட்ட பலரும் இக் கல்வி நிகழ்ச்சியில் பங்கு கொள்கின்றனர் எனப் பலரும் தமது ஆதங்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

தேசிய கல்வி நிறுவகத்தினால் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் பாட வழிகாட்டல்களின் அடிப்படை யிலேயே வடிவமைக்கப்படுகின்றன. அத்துடன் குழு ஒன்றின் மேற்பார்வையின் பின்னரே நிகழ்ச்சிக்கான அனுமதி வழங்கப்படுகின்றது. ஆனால் தனிப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் தனியார் கல்வி நிலையங்கள் மூலம் பல நிகழ்ச்சித்திட்டங்கள் எவ்வித மேற்பார்வையுமின்றி மேற்கொள்ளப்பட்டு வருவதனைக் காணலாம்.

பல்கலைக்கழகப் பட்டத்தைப் பெற்ற பின்னர் அரசாங்கத் துறையில் தொழில் புரிபவர்கள், பொதுப் பரீட்சையில் பங்கு கொண்ட அனுபவமில்லாதவர்கள், வேறு பாடங்களைக் கற்பித்து அனுபவம் பெற்றவர் எனக் கேள்விக்கிடமான நபர்கள் இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கு கொள்கின்றனர் என முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

சம்பந்தப்பட்ட அதிகார பீடங்கள் இதில் கவனம் செலுத்துவதில்லை. இவ்வாறானவர்களின் கற்பித்தலின் காரணமாகக் கல்வி ரீதியான பல எதிர்மறை விளைவுகள் ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் பற்றி அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

தற்பொழுது இத்தகைய தொலைக்காட்சிக் கல்வி ஏற்பாடுகள் வகை தொகையின்றி தோன்றிவிட்டன என ஓர் அதிபர் தெரிவித்தார்.

பாடத்திட்டங்கள் காலத்திற்குக் காலம் மாற்றப்பட்டு வருகின்றமையை அறியாது, சம்பந்தமில்லாத பழைய பாடத்திட்டங்கள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பரீட்சை வினாத்தாள்களுக்கும் ஒதுக்கப்பட்ட நேரங்கள் மாற்றப்பட்டுள்ளமையை அறியாமலும் பாடங்கள் நடாத்தப்படுகின்றன.

மிக முக்கியமாக ஒவ்வொரு பாடத்துறை சார்ந்த, வழமையாகப் பயன்படுத்தப்படும் கலைச்சொற்களை அறியாது, மனம் போன போக்கில் பொருத்தமற்ற சொற்களைப் பயன்படுத்துவதால் மாணவர்கள் குழப்பத்திற்குள்ளாக நேரிடுகின்றது. இதனால், அவர்கள் பரீட்சையில் புள்ளிகளை இழக்கும் அபாயமும் உள்ளதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது. வகுப்பறையில் குறிப்பிட்ட சில மாணவர்களுக்குக் கற்பித்தவர்கள் தற்பொழுது பெருந்தொகையான மாணவர்களை இலக்குக் குழுவாகக் குறிவைக்கும் போது ஏற்படக் கூடிய விளைவுகள் பாரதூரமானவையாக இருக்கும்.

காலத்திற்குக் காலம் மாற்றமடைகின்ற கலைத்திட்ட மாற்றங்களை அறியாது கற்பிப்பவர்கள் தற்போதைய கல்வியாண்டிற்குரிய சரியான கலைத்திட்டம் பற்றி அறியாது கைவிடப்பட்ட பழைய கலைத்திட்டத்தைப் பயன்படுத்திக் கற்பிக்கின்றனர் எனவும் தெரிகின்றது.

ஆனால் நிச்சயமாக வினாத்தாள் புதிய கலைத்திட்டத்திற்கேற்பவே தீர்மானிக்கப்படும் என்பதால் மாணவர்கள் ஏமாற்றப்படவும் வாய்ப்புள்ளது. இவ்வகையில் கற்பித்தல் முற்றாகவே பயனற்ற ஒரு முயற்சியாக அமையும்.

இரண்டு மணித்தியாலத்திற்குரிய 'புவியியல் ஒன்று' வினாத்தாளின் நேரம் மூன்று மணித்தியாலத்திற்குரிய வினாத்தாளாக மாற்றப்பட்டுள்ளது என்பதனை அறியாமல் தொலைக்காட்சிகளில் கற்பிப் பவர்களும் இருக்கின்றனர் எனத் தெரிகின்றது.

பாடசாலைகள் மூடப்பட்டு, வகுப்புக்கள் நடை

> ஒரு பாடத்திற்குரிய பரீட்சைக்கு இருபதுக்கு மேற்பட்ட மாதிரி வினாத் தாள்கள் இணையத்தளத்தில் ஏற்றப்படும் போது மாணவர்கள் இவற்றில் எதனை நம்புவது என்று செய்வதறியாது நிற்கின்றனர்.

பெறாமல் இருப்பதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி கற்பித்தல் அனுபவமற்றவர்கள் விற்பனை நோக்குடன் பல பயிற்சி நூல்களையும் வெளியிடுகின்றனர். கற்பித்தல் அனுபவமற்ற பல ஆசிரியர்களினால் எழுதப்பட்ட பல நூல்களும் பயிற்சிப் புத்தகங்களும் இணையத் தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அதே போன்று பாடங்களுடன் தொடர்பற்ற வேறு பாட ஆசிரியர்கள் பலர் ஏராளமான மாதிரி வினாத்தாள்களையும் கல்விச் சந்தைக்கு அனுப்புகின்றனர். பட்டம் பெறாத சிலரும் அடைப்புக் குறிக்குள் பட்டத்தைப் போட்டுவிட்டு எல்லாப் பாடங்களுக்கும் மாதிரி வினாத்தாள்களைத் தயாரிக்கின்றனர். நூற்று வீத சித்திக்கு உத்தரவாதம் போன்ற வாசகங்களும் அச்சிடப்பட்டுள்ளன. இந்நிலையில் ஒருவரே பல பாடங்களில் வழிகாட்ட முனைவது மாணவர்களுக்குப் பல பிரச்சினைகளை ஏற்படுத்தும் என விடயம் தெரிந்த கல்வி ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

பாடசாலைக் கல்வி செயலிழந்து காணப்படும் நிலையில் இத்தகைய கல்வி முறைத் திரிபுகளைக் கண்காணிப்பதற்கான பொறிமுறை எதுவும் கல்வி அதிகார பீடங்களில் இருப்பதாகத் தெரியவில்லை. கல்வி அதிகார பீடங்களும் யார் குற்றியும் அரிசியானால்



சரி என்ற ரீதியில் செயற்படுகின்றனர். ஒரு வகையில் இத்தகைய முயற்சிகள் முறையான கல்வி முறைக்கு அப்பால் முறைசாரா நோக்கில் இடம்பெற்று வருகின்றன. எதிர்பாராமல் எழுகின்ற இத்தகைய புதிய சவால்களைக் கண்காணிப்பதற்கான பொறிமுறை ஒன்று தேவைப்படுகின்றது. முறையான பாடசாலைக் கல்விக்கு அப்பால் கண்காணிப்பு வழிகாட்டல் இல்லாத முறையில் இடம்பெறும் இத்தகைய வர்த்தக ரீதியான குறைபாடு நிறைந்த கல்வி முயற்சிகள் எதிர்வரும் பரீட்சை சித்திகளில் பெரியளவினால வீழ்ச்சியை ஏற்படுத்தலாம்.

கல்விக் கொள்கை வகுப்போருக்கு காலம்காலமாக வெறுப்பைத் தரும் ஒரு விடயம் பெரும்பாலும் நகரப் பகுதிகளில் இடம்பெறும் தனியார் வகுப்புக்களாகும். அவர்கள் இவற்றை ஒழித்துக் கட்டும் எண்ணத்திலேயே செயற்பட்டு வந்துள்ளனர். தேசிய கல்வி ஆணைக் குழுவானது இத் தனியார் போதனை பற்றி விரிவான ஆய்வுகளையும் செய்துள்ள நிலையில் இன்று கொரோனா ஏற்படுத்திய வாய்ப்புக்களைப் பயன்படுத்தி வரும் இப் போதனையாளர்கள் கல்வியில் ஏகபோக உரிமையைத் தாம் பெற்றுவிட்டனர் என்பது போன்று நடந்து கொள்கின்றனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# சிங்களவர்களுக்கு மட்டுமே இந்நாடு சொந்தம் என்பது பெரும் அபத்தமாகும்

## தமிழரசு பொதுச் செயலாளர் கூறுகின்றார்

மட்டக்களப்பு,ஜூன்23

விஜயன் இலங்கைக்கு வந்து குவேனியை மணம் முடித்து பின்னர் அவளை விடுத்து பாண்டிய இளவரசியரைத் திருமணம் முடித்ததன் காரணமாக தமிழ் மொழியும், வடமொழியும் சேர்ந்து உருவாகியதே சிங்கள மொழி. இந்த வரலாறுகள் எல்லாம் எங்களது பழைய பாடப் புத்தகங்களிலே இருந்தன. அவற்றை முற்றாக மறைத்து விட்டார்கள் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராசசிங்கம் தெரிவித்தார்.

இன்று மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது ஞானசார தேரரின் கருத்து தொடர்பில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

அண்மையில் ஞானசார தேரர் இந்த நாட்டில் ஓர் அங்குல நிலம் கூட ஏனைய



இனத்தவர்களுக்கு - குறிப்பாகத் தமிழர்களுக்கு - சொந்தம் அல்ல என்று குறிப்பிட்டிருக்கின்றார். இந்த விடயத்தை நாங்கள் மிகக் கடுமையாக எதிர்க்கின்றோம். வரலாறு தெரியாத விதத்திலே, வரலாற்றைப் பொய்யாக்குகின்ற விதத்திலே இந்த விடயம் சொல்லப்படுகின்றது.

வரலாற்றின் அடிப்படையிலே நாங்கள் விஜயன் வருவதற்கு முன்பே இங்கு இருந்தவர்கள். லெமோரியாக் கண்ட வரலாற்றின் அடிப்படையில் ஆதிக்குடிகள் நாங்கள். மிக அண்மைய ஆராய்ச்சிகளின் படி கதிரவெளியில் கண்டுபிடிக்கப்பட்ட முதுமக்கட் தாழிகள் புத்தபெருமான் பிறப்பதற்கு 500 ஆண்டுகளுக்கு முன்பே நாகர்கள் இங்கு வாழ்ந்தார்கள் என்கின்ற வரலாற்றைச் சொல்லுகின்றன. எங்களது ஆதிக்குடிகள் நாகர்கள். இதனடிப்படையில் எந்தவகையிலும் தமிழர்கள் இந்த நாட்டுக்கு அந்நியப்பட்டவர்கள் அல்லர்.

விஜயன் வந்து குவேனியை மணம் முடித்துப் பின்னர் அவளை விடுத்து பாண்டிய இளவரசியரைத் திருமணம் முடித்ததன் காரணமாகத் தமிழ் மொழியும், வட மொழியும் கலந்து உருவாகியது தான் சிங்கள மொழி. இந்த வரலாறுகள் எல்லாம் எங்களது பழைய பாடப் புத்தகங்களிலே இருந்தன. அவற்றை முற்றாக மறைத்து விட்டார்கள். தமிழ் மொழியும், வட மொழியும் சேர்ந்து உருவாகிய சிங்கள மொழியைப் பேசுகின்றவர்கள் இது தங்களுக்கு மட்டும் சொந்தமான நாடு என்று சொல்வது மிகவும் அபத்தமானது. அந்த வகையிலே தொல்பொருளுக்காக கிழக்கில் அமைக்கப்பட்ட செயலணியை நாங்கள் முற்றாகக் கண்டிக்கின்றோம்.

எமக்கு எதிரணியில் இருந்து எம்மை விமர்சிக்கின்ற, கிழக்கை மீட்கப் போகின்ற அன்பர்களே, உங்களால் இந்தச் செயலணியை எதிர்த்துக் கருத்து வெளியிட முடியுமா? ஞானசார தேரரின் கருத்து தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன? இவற்றை எங்களுடைய மக்களுக்கு நீங்களே சொல்லுங்கள். - என்று தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் 5 ஆவது ஆசனத்துக்கு மூன்று தரப்புகள் இடையே போட்டியாம்

### பிள்ளையான், அமீர் அலி, ஹிஸ்புல்லா மோதல்



எதிர்வரும் தேர்தலில் மட்டக்களப்பில் எனக்கும் பிள்ளையானுக்கும்தான் போட்டி நிலவு கின்றதென கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநரும் ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் வேட்பாளருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

இப்போட்டியில் நான் நிச்சயமாக வெற்றியடைவேன் என அவர் சூளுரைத்துள்ளார். ”ஏனென்றால் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது காத்தான்குடியில் பதினெட்டாயிரத்து ஐந்நூறு வாக்குகள் கிடைத்தன. மேலும், காத்தான்குடி பகுதியில் எனக்கு வாக்குகள் கூடியுள்ளன. எனவே காத்தான்குடியில் மாத்திரம் இருபத்தி இரண்டாயிரம் வாக்குகளை நான் பெற்றுக்கொள்வேன்” எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுத்தேரதல் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக ஹிஸ்புல்லாஹ் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐந்து உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். அதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மூன்று ஆசனங்களைப் பெறுவது உறுதியாகிவிட்டது.

இந்நிலையில் எஞ்சியுள்ள இரண்டு ஆசனங்களில் ஒன்றை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு அதிகமாக காணப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில் எஞ்சியுள்ள ஐந்தாவது ஆசனத்துக்கே தற்போது போட்டி நிலவுகின்றது. இந்தப் போட்டி எனக்கும், அமீர் அலி, பிள்ளையான் ஆகிய மூன்று பேருக்கும்தான் நிலவுகிறது.

அந்த வகையில் ஏறாவூர், கல்குடா ஆகிய இடங்களில் எனக்கு வாக்குகள் உள்ளன. எனவே இருபத்தி எட்டாயிரம் வாக்குகளை பெறுவது என்பது எனக்கு பெரிய விடயமல்ல. -எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பிறந்த நாள் நிகழ்வின் போது கைதான 24 பேருக்கும் பிணை

### யாழ் நீதிமன்றம் வழங்கியது

சுன்னாகம் பகுதியில் நண்பர்கள் இருவரது பிறந்தநாள் கொண்டாட்டத்தை நடத்திய போது, சட்டவிரோதக் கூட்டத்தைக் கூடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 26 பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட 24 பேரையும் பிணையில் விடுவித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டது.

அத்துடன் பிள்ளைகளை செல்லமாக வளர்த்தால் செல்லமாகவே வீட்டில் வைத்திருக்க வேண்டும். வெளியில் குற்றச்செயல்களில் ஈடுபடவிட்டால் நீதிமன்றம் கட்டுக்காவலில் வைக்கவேண்டிய நிலை ஏற்படும் என்று சந்தேக நபர்களின் பெற்றோருக்கு நீதிவான் ஏ.பீற்றர் போல் அறிவுரை வழங்கினார்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுன்னாகம் இலங்கை வங்கி கிளைக்கு அண்மையான பகுதியில் உள்ள வீடொன்றில் கடந்த 15ஆம் திகதி பிறந்தநாள் நிகழ்வு இடம்பெற்றது. முல்லைத்தீவைச் சேர்ந்த ரணா பிரசாத் (வயது - 24), மருதனார்மடத்தைச் சேர்ந்த நெல்லையா நேமிநாதன் (வயது - 20)ஆகிய இருவரது பிறந்தநாள் கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது.

இந்தக் கொண்டாட்டம் தொடர்பில் தகவல் அறிந்த யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழான மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸார், அன்றைய தினம் மாலை 5 மணியளவில் பிறந்தநாள் இடம்பெற்ற வீட்டுக்குச் சென்றனர். நிகழ்வில் பங்கேற்ற 40இற்கும் மேற்பட்டோரிடம் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அவர்களில் 26 பேரை மட்டும் கைது செய்த பொலிஸார், அவர்களை விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிப்பதாகத் தெரிவித்து அழைத்துச் சென்றனர்.

இந்த நிலையில் நீண்ட இழுபறியின் பின்னர் சந்தேக நபர்கள் 26 பேரும் யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் 15ஆம் திகதி இரவு முற்படுத்தினர். சந்தேக நபர்களிடம் ஒவ்வொருவராக அடுத்த நாள் அதிகாலை வரை வாக்குமூலம் பெறப்பட்டது.

சந்தேக நபர்கள் 26 பேரும் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் கடந்த 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் முற்படுத்தப்பட்டனர்.

வழக்கில் முற்படுத்தப்பட்ட சிறுவர்கள் இருவரது பெற்றோரையும் அழைத்து அறிவுரை வழங்கிய நீதிவான் ஏ.பீற்றர் போல், அவர்கள் இருவரையும் தலா ஒரு லட்சம் ரூபாய் ஆள் பிணையில் விடுவித்தார்.

ஏனைய 24 பேரையும் வரும் ஜூன் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த நிலையில் சந்தேக நபர்கள் 14 பேர் சார்பில் சட்டத்தரணி வீ.கௌதமன், கடந்த 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை நகர்த்தல் பத்திரம் அணைத்து பிணை விண்ணப்பம் செய்தார்.

எனினும் அன்றைய தினம் பிணை வழங்க மறுத்த மன்று, சந்தேக நபர்கள் 24 பேரையும் நேற்று மன்றில் முற்படுத்த சிறைச்சாலைக்கு உத்தரவிட்டது. அத்துடன், சந்தேக நபர்களின் பெற்றோரை மன்றில் முன்னிலையாகுமாறும் உத்தரவிட்டது.

இந்த நிலையில் சந்தேக நபர்கள் 24 பேரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். சந்தேக நபர்களின் பெற்றோரும் மன்றில் முன்னிலையாகினர்.

பெற்றோருக்கு அறிவுரை வழங்கிய நீதிவான் ஏ.பீற்றர் போல், சந்தேக நபர்களை கடும் நிபந்தனையுடனான பிணையில் விடுவிக்க உத்தரவிட்டார். சந்தேக நபர்கள் 24 பேரும் தலா 2 லட்சம் ரூபாய் பெறுமதியான ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

## இரண்டே நாளான பெண் சிசுவை காட்டில் விட்டுச் சென்றவர்கள்!

அம்பலந்தொட்ட நவகம்கொட பகுதியில் பிறந்து இரண்டு நாள்களேயான பெண் குழந்தை ஒன்றை காட்டுப் பகுதியில் விட்டுச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாகனம் திருத்தம் செய்யும் இடம் ஒன்றுக்கு அருகில் உள்ள காட்டுப்பகுதியில் போடப்பட்டிருந்த பச்சிளம் குழந்தையே இவ்வாறு மீட்கப்பட்டள்ளது.

அடையாளம் தெரியாத நபர்கள் குழந்தையை வெள்ளை துணியில் சுற்றி நவகம்கொட பிரதேசத்தில் உள்ள காட்டுப் பகுதியில் இருக்கும் மின் கம்பத்திற்கு அருகில் வைத்து விட்டுச் சென்றுள்ளனர்.

இது குறித்து பிரதேசவாசிகள் அம்பலந்தொட்ட பொலிஸாருக்குத் தகவல் வழங்கியமையை அடுத்து அங்கு விரைந்த பொலிஸார் குழந்தையை மீட்டு ஹம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

ஹம்பாந்தோட்டை வைத்தியசாலையின் சிறுவர் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள குழந்தை தற்போது ஆரோக்கியமாக இருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. குழந்தையை குறித்த இடத்தில் போட்டு விட்டு சென்றவர்களை கண்டறிய பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

## ஹப்புத்தளை வீடொன்றில் வெடிப் பொருள்கள் மீட்பு!

பெருந்தோட்டமொன்றில்பாழடைந்த வீடொன்றிலிருந்து கைக்குண்டுகள் இரண்டுஉட்பட பெருமளவிலான வெடிப் பொருள்களை ஹப்புத்தளை பொலிஸார் இன்று மீட்டனர்.

ஹப்புத்தளை, போவ தோட்டத்தின் இரட்டைவெளிப் பிரிவில் பாழடைந்த வீடொன்றிலிருந்தே,மேற்படி பொருள்கள் மீட்கப்பட்டன.

அப்பகுதிக்கு பிறிதொரு விடயமாக சென்ற பொலிஸார், அந்த வீட்டைச் சோதனையிட்டனர். அச் சோதனையின் போது,மேற்படிவெடிப் பொருள்கள் மீட்கப்பட்டன.

டெட்டனேட்டர் 02, கைக்குண்டுகள் 02, வெடிப்பொருட்கள், ஈயம், வயர்கள் ஆகியனவே மீட்கப்பட்டபொருள்களாகும்.

மீட்கப்பட்ட கைக்குண்டுகள் இரண்டினை, பசறை குண்டுகள் செயலிழக்கும் பிரிவினர் விரைந்து செயலிழக்கம் செய்தனர்.

ஹப்புத்தளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சாகர தயாரட்ன தலைமையிலான குழுவினர்,மேற்படி சம்பவம் குறித்து தீவிரபுலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். குறிப்பிட்ட வீட்டின் உரிமையாளரைத் தேடி பொலிஸார் வலைவிரித்துள்ளனர். மேற்படிசம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.

# அரசு மூன்றில் இரண்டு பங்கு பெற உதவுவதா? அது சுமந்திரனின் தனிப்பட்ட முடிவுதானாம்!

## கூட்டமைப்பின் முடிவல்ல என்கிறார் செல்வம்

தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அடைவதற்கு ஆதரவு வழங்கும் என கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் தெரிவித்த கருத்து, அவரது சொந்தக் கருத்தே தவிர தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கருத்தாக அமைந்து விடாது என கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

ஏனெனில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நான்கு பிரதான கட்சிகளை உள்ளடக்கிய ஒரு அமைப்பு. அதில் எமது ரெலோ அமைப்பை கொண்ட கட்சிக்கு அவரது கூற்றில் முழுமையான உடன்பாடு கிடையாது.

எடுத்த எடுப்பிலேயே அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு ஆதரவு தருகிறோம் என்று எம்மால் கூறிவிட முடியாது. தமிழ் மக்கள் பட்ட வலிகளை, தமிழ் மக்கள் பட்ட துன்பங்களை நாங்கள் இலகுவாக தாரைவார்த்து விட முடியாது. அரசாங்கத்துக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டை பெரும்பான்மையை வழங்க வேண்டுமானால் நாம் ஆழமான பேச்சுகளை அரசாங்கத்துடன் நடத்தி அதற்கான உத்தரவாதங்களை பெற்றுக்கொள்ள வேண்டும். அதனை சுமந்திரனும் அல்லது சம்பந்தன் ஐயாவும் தனித்துச் செய்ய முடியாது.

அதனைக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற கட்சிகளின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்து தமிழ் மக்களின் அபிப் பிராயங்களைக் கேட்டுச் செய்ய வேண்டும். கடந்த அரசாங்கத்தில் நாம் விட்ட தவறுகளை மீட்டிப் பார்க்க வேண்டும். கடந்த அரசாங்கம் எம்மை ஏமாற்றியதை நினைத்துப் பார்க்க வேண்டும்.



எனவே இந்த முன் அனுபவங்களை கொண்டு இனியும் எவரிடமும் ஏமாறாத வகையில் நமது எதிர்கால பயணத்தை தொடர வேண்டும். எனவே மூன்றிலிரண்டு என்பது சிந்தித்து செயற்பட வேண்டிய ஒரு விடயமாகும்.- என்றார்.

எடுத்தோம் கவிழ்த்தோம் என்று செய்ய முனையக் கூடாது. எமக்கு எமது மக்களுக்கு நல்லது நடக்குமாயின் ஆதரவு வழங்குவதில் எந்தவிதமான தப்பும் இல்லை.

ஆனால் அதனை சரியாக சரியான அணுகுமுறையுடன் செய்ய வேண்டும் என்பதே எமது கருத்தாகும். கடந்த காலங்களில் நாங்கள் கூட்டாக எடுத்த முடிவுகளாலேயே ஏமாற்றப்பட்ட வரலாறுகளை காண்கின்றோம். அதனால் தனித்து எதனையும் செய்ய வேண்டாம் என்பதே எமது கோரிக்கையாகும்.

# யாழில் சிறப்புற நடந்த சர்வதேச யோகா நாள்

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம், வடக்கு மாகாண சபையின் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து 2020ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21ஆம் திகதியன்று 6வது உலக யோக நாளை நல்லூர் செம்மணி வீதியில் அமைந்துள்ள கல்வி அமைச்சின் மைதானத்தில் கொண்டாடியது.

பாரதப் பிரதமர் நரேந்திர மோதியின் செய்தி மற்றும் ஸ்பிரிட் ஓவ் யோகா என்ற காணொலியுடன் நிகழ்வு ஆரம்பமாகியது.

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், இந்தியத் துணைத்தூதுவர் பாலச்சந்திரன முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு உரை ஆற்றினார். யோகா பயிற்றுனர் சூரியகுமார் யோகாசனப் பயிற்சிகளை வழிநடத்த, கல்வி அமைச்சிலிருந்தும் மாணவர்களும் 100 க்கு மேற்பட்டோர்கள் சமூக இடைவெளியை கடைப்பிடித்து பங்குபற்றினர்.

உலக யோகா தினத்தை முன்னிட்டு, தூதரகத்தின் சார்பில் நடத்தப்பட்ட கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு இந்தியத் துணைத் தூதுவர், கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் பரிசுகளை வழங்கினர்.

**கட்டுரைப் போட்டி**

முதலாவது பரிசு:- ரூபா 10,000 - அம்சாகினி சிவராசகுருக்கள், புற்றளை மகா வித்தியாலயம்.

இரண்டாவது பரிசு:- ரூபா 7,500 - பரணிதரன் சானுஜன் ,சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம்.

மூன்றாவது பரிசு:- ரூபா 5,000 - ஜே.ஜெப்றி ஜானுஜன், இளவாலை புனித கென்றி அரசர் கல்லூரி.

**ஓவியப் போட்டி**

முதலாவது பரிசு:- ரூபா 10,000 - ஜெயதீபன் பிரணாப், ஹாட்லி கல்லூரி

இரண்டாவது பரிசு:- ரூபா 7,500 - தர்மலிங்கம் அபிராமி, சண்டிலிப்பாய் இந்து கல்லூரி

மூன்றாவது பரிசு:- ரூபா 5,000 - ற.கிருஷாந்தி, கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயம்

மேற்படி போட்டிகளில் கலந்து கொண்ட மீதமுள்ள 39 பேருக்கு ஆறுதல் பரிசாக தலா ரூபா 1,000 பணப் பரிசாக வழங்கப்பட்டது. மாகாணப் பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர்திருமதி சுஜீவா சிவதாஸுடைய நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுபெற்றது.













## கொரோனா நெருக்கடியும்...

முறையான வகுப்புக்கள் நடைபெறாத நிலையில் தம்மைநாடிவரும்நூற்றுக்கணக்கானமாணவர்களிடம் ‘இவை தான் பரீட்சை வினாக்கள்’ என அறுதியிட்டுக் கூறியே பாடங்களை நடத்துகின்றனர். கடந்த வருட பொதுத் தேர்வில் மாணவர்கள் சித்தியில் காணப்பட்ட வீழ்ச்சிக்கு இத்தகைய போதனாசிரியர்கள் வலியுறுத்திய பாடப் பகுதிகளை அல்லது வினாக்களை மட்டுமே மாணவர்கள் சிரத்தையுடன் நம்பிக் கற்றமையே காரணம் எனச் சில ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வர்த்தக ரீதியிலான போதனாசிரியர்கள் கூறுவதை நம்பி மாணவர்கள் பல பிரதான பாடப் பகுதிகளைப் படிப்பதைத் தவிர்த்து விடுவதினால் பரீட்சையில் ‘உள்ளடக்கத் தகுதியும்’ கேள்விக்குள்ளாகின்றது. அதாவது கல்வி முறையில் எதிர்பார்ப்பு முழுப் பாடப் பகுதியையும் கற்றுத் தேர்ந்தால் மட்டுமே அப்பாடம் தொடர்பான சகல தேர்ச்சிகளையும் மாணவர்கள் அடைந்துகொள்ள முடியும். இந்நிலையில் இடைநிலைக் கல்வி நோக்கங்கள் முற்றாகத் திரிபடையவும், திசை மாறவும் இத்தனியார் போதனை வழிவகுக்கின்றது.

ஒரு பாடத்திற்குரிய பரீட்சைக்கு இருபதுக்கு மேற்பட்ட மாதிரி வினாத்தாள்கள் இணையத்தளத்தில் ஏற்றப்படும் போது மாணவர்கள் இவற்றில் எதனை நம்புவது என்று செய்வதறியாது நிற்கின்றனர். இம் மாதிரி வினாத்தாள்களில் காலாவதியான பாடப்பரப்புக்களும் உள்ளடங்கிக் காணப்படுவது நிலைமையை மேலும் மோசமாக்குகின்றது. அத்துடன் ஒவ்வொரு ஆசிரியரும் வெவ்வேறு கலைச்சொற்களைப் பயன்படுத்துகின்றனர். மொத்தத்தில் கொரோனா வைரஸின் தீவிரப் பரம்பலினால் யார் பயனடைகின்றார்கள்? யார் பேரிழப்புக்களுக்கு உட்படுகின்றனர்? என்பது தெளிவாகின்றது.

தனிப்பட்ட ஆசிரியர் கல்விச் சந்தையில் கொடிகட்டிப் பறக்க பாடசாலைகள் மூடப்பட்டது காரணமாகி விட்டது. தேசியக் கல்வி முறையைக் குறிப்பிட்ட சில இலக்குகளுடன் முன்னெடுத்துச் செல்ல முயலும் கல்வி அதிகார பீடங்கள் மிகவும் அக்கறையுடன் மேற்கூறிய சீர்கேடான நிலைமைகளைக் கருத்தில் கொண்டு தேசிய, மாகாண மட்டங்களில் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே எமது வேண்டுகோளாகும்.

# கொழும்பு பஸ் நிலையத்தில் சாரதிகளின் ஓய்வுக்கு வசதி

கொழும்பு, ஜூன் 23

தூர இடங்களுக்கான பஸ்களில் பணி புரியும் ஊழியர்களுக்கு பணிக்கு நடுவில் ஓய்வு எடுப்பதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நிலான் மிரண்டா தெரிவித்துள்ளார்.

கொழும்பு – பஸ்ரியன் மாவத்தையில் உள்ள வெளி மாவட்டங்களுக்கான பஸ் நிலையத்திலேயே வசதிகளுடன் கூடிய ஓய்வு அறைகள் அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தூர இடங்களுக்கான சேவைகளில் ஈடுபடும் சாரதிகள் உரிய முறையில் ஓய்வெடுக்காமல் தொடர்ந்தும் பஸ்களைச் செலுத்துவதனால், விபத்துகள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகமாகவுள்ளன எனவும் அதனைக் குறைக்கும் வகையில் தேவையான வசதிகளுடன் கூடிய ஓய்வு அறைகளைநிர்மாணிக்கத்திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நிலான் மிரண்டா சுட்டிக்காட்டியுள்ளார்

# தகவல் தொழில் நுட்பப் பாடத்தில் சித்தி வெளிவாரி மாணவருக்கும் கட்டாயமானது

## உயர் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 23

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் வெளிவாரியாகக் கற்று, பட்டதாரிகளாக வெளியேறும் அனைவரும் தகவல் தொடர்பாடல் துறையிலும் சித்தி பெற்றிருக்க வேண்டும் என்றும், அதற்கேற்ற வகையில் அனைத்துக் கற்கை நெறிகளுக்குமான பாடத்திட்டங்களில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன எனவும் உயர்கல்வி அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.



அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே உயர் கல்வி அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு கருத்து வெளியிட்ட உயர்கல்வி அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில் – இலங்கையில் தற்போதுள்ள கல்வி முறையின்படி பல்கலைக்கழகங்களில் வெளிவாரியாகக் கற்று வெளியேறும் பட்டதாரிகள் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்வது இலகுவான காரியம் இல்லை. அதே போலவே பல்கலைக்கழகங்களில் இருந்து உள்வாரியாக வெளியேறுவோரும் தொழில் சந்தைக்கு உகந்த வகையில் உருவாகுவதும் இல்லை.

எனவே இந்த இடைவெளியை நிரப்பும் வகையில், புதிய கல்விக் கொள்கைக்கு அமைவாக இலத்திரனியல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பப் பாடங்கள் பாடத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. – என்றார். (ம)

# தபால் மூல வாக்களிப்புக்கான சுகாதார நடைமுறைகள் கிளிநொச்சியில் அரச அதிபரின் தலைமையில் ஆராய்வு



கிளிநொச்சி, ஜூன் 23

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் பொலிஸ் மற்றும் சுகாதாரத் துறை அலுவலர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில், மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரும், அரசாங்க அதிபருமான ரூபாவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட செயலக அதிகாரிகள், மாவட்ட தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகள், தபால் திணைக்கள அதிகாரிகள், பொலீஸார் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலுக்கான முன் ஆயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளோடு இந்த வருடம் கொரோனாப் பெருந்தொற்றுப் பரவல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவேண்டிய தேவை எழுந்துள் ளதனால் சுகாதாரம் தொடர்பில் விசேட கவனம் செலுத்துவதை நோக்கமாக கொண்டு இந்தக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

தபால் மூல வாக்களிப்புக்கான, வாக்குச் சீட்டு விநியோகம் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் விநியோக நடவடிக் கையின் போது பாதுகாப்பு மற்றும் சுகாதார நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டது. மாவட்டத்தில் 3 ஆயிரத்து 590 தபால் மூல வாக்குச் சீட்டுக்களையும் நியமிக்கப்பட்டுள்ள 8 குழுக்கள் மூலமாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது குழுக்களாகவே செயற்பட வேண்டியுள்ளது. எனவே மேற்கொள்ளவேண்டிய சுகாதார நடைமுறைகள் குறித்து சுகாதாரத்துறையினரின் ஆலோசனைகளும் பெறப்பட்டன. (ம-11)

# யாழ் மாநகரப் பாடசாலைகளுக்கான தொற்று நீக்கல் பணியில் மாநகர சபை

## பதில் முதல்வர் ஈசன் அறிவிப்பு

யாழ் மாநகரசபை நிர்வாகப் பரப்பினுள் அமையப்பெற்றுள்ள பாடசாலைகளில் தொற்று நீக்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ள யாழ் மாநகரசபை தயாராக உள்ளது என்று யாழ்ப்பாணம் மாநகர சபையின் பதில் முதல்வர் து.ஈசந் ஓர் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார். அவரின் அறிக்கையின் விவரம் வருமாறு:

கொவிட் 19 வைரஸ் தாக்கம் காரணமாக அனைத்துப் பாடசாலைகளும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமை யாவரும் அறிந்ததே. இந்தப் பாடசாலைகள் அனைத்தும் இம்மாத இறுதியில் மீள ஆரம்பிக்கப்படவிருக்கின்றன என அரசு அறிவித்துள்ளது. இந் நிலையில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் பாடசாலைகள் சிரமதானம் செய்யப்பட்டு தொற்று நீக்கம் செய்யப்பட வேண்டியுள்ளன.

எனவே யாழ் மாநகரசபை நிர்வாகப் பரப்பினுள் அமையப்பெற்றுள்ள பாடசாலைகளில் தொற்று நீக்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ள யாழ் மாநகரசபை தயாராக உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

எனவே பாடசாலை அதிபர்கள் தமது கோரிக்கைகளை மாநகர முதல்வருக்கு எழுத்து மூலமாக எதிர்வரும் 2020.06.25 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும்.

தமது பாடசாலைகளுக்கு தொற்று நீக்கல் மேற்கொள்ள வேண்டுமாயின் விண்ணப்பிக்கின்ற ஒவ்வொரு பாடசாலைகளும் 25.06.2020 ஆம் திகதி முன்னர் தமது பாடசாலைகளை சிரமதானம் செய்து வைத்திருக்க வேண்டியது மிக முக்கியமான விடயமாகும். சிரமதானம் செய்யப்படாத பாடசாலைகளுக்கு கிருமித் தொற்று நீக்கல் மேற்கொள்வது சிரமமாகும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே உரிய முடிவுத் திகதிக்கு முன்னர் கிருமித் தொற்று நீக்கலுக்காக விண்ணப்பிக்கின்ற பாடசாலைகளின் விண்ணப்பங்கள் விண்ணப்பிக்கப்படுகின்ற கால ஒழுங்கில் பதிவு செய்யப்பட்டு தொற்று நீக்கல் மேற்கொள்ளப்படும் என்பது விசேட அம்சமாகும்.

மேலதிக விபரங்களுக்கு யாழ் மாநகர முதல்வர் அலுவலகம் மற்றும் மாநகர பதில் முதல்வரை தொடர்பு கொள்ள முடியும் என்பதையும் அறியத்தருகின்றோம். – என்று உள்ளது.

# கொக்குத் தொடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக தமிழர்களின் பூர்வீகத் தோட்டச்செய்கை நிலமான, தொட்டகண்டல் குளம் பகுதியில் உள்ள 825ஏக்கர் காணிகள் அபகரிக்கப்பட்டு அது சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

தற்போது அந்தக் காணிகளில் பெரிய பங்களா ஒன்று சிங்கள மக்களால் நிறுவப்பட்டுள்ளதுடன் பெரிய அளவில் தோட்டச் செய்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இது குறித்து வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாயில், கோட்டைக்கேணி தொடக்கம் அம்பட்டன் வாய்க்கால், தொட்டகண்டல் குளம் ஆகிய பகுதிகளில் ஒரு பகுதியாக வனஜீவராசிகள் திணைக்களமும், மறுபகுதியில் வனவளத் திணைக்களமும் காணிகளை அபகரித்துள்ளன.

இந் நிலையில் நிமால் சிறிபால டி சில்வா அமைச்சராக இருந்த காலத்தில் தொட்டகண்டல் குளம் பகுதியிலுள்ள 825ஏக்கர் காணிகள், 33 சிங்கள பயனாளிகளுக்கு, ஒருவருக்கு தலா 25ஏக்கர் வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

நான் வடக்கு மாகாணசபை உறுப்பினராக இருக்கும்போது, இவ்விடயத்தை மாகாண சபையிலும் சுட்டிக்காட்டியிருந்தேன்.

நிமால் சிறிபால டி சில்வாவின் நெருங்கிய சகாக்களுக்கு இவ்வாறு காணி பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பதாகச் சிங்களப் பத்திரிக்கை ஒன்றும் செய்தி வெளியிட்டிந்தது.

அதேவேளை, இவ்வாறு சிங்களப் பயனாளிகளுக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்ட தொட்டகண்டல் குளம் என்னும் இடத்தில் தற்போது பெரிய பங்களா ஒன்று கட்டி எழுப்பப்பட்டிருக்கின்றது. அத்தோடு காணியைச் சுற்றிலும் சி.சி.ரி.வி கமெராக்கள் பொருத்தப்பட்டு அந்தக் காணிகளுக்குள் பாரிய அளவில் தென்னைகள், வாழை, மா உள்ளடங்கலாக தோட்டச் செய்கை இடம்பெற்று வருகின்றது.

ஏற்கனவே, எமது 80 தமிழ்ப் பயனாளிகளுக்கு அந்த 825ஏக்கர் காணிகளும் வழங்கப்பட்டிருந்தன.

கிட்டத்தட்ட 1956ஆம் ஆண்டு தொடக்கம், 1984ஆம் ஆண்டு வரை தமிழ் மக்கள் அந்தக் காணிகளில் பயிர்ச்செய்கை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அதன் பிற்பாடு 1984ஆம் ஆண்டு அப்பகுதியிலிருந்து எமது தமிழ் மக்களை வெளியேற்றிவிட்டு இந்தக் காணிகளை அபகரித்துள்ளனர்.

தற்போது அந்தக் காணிகள் சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட நிலையில் அவர்களால் அங்கு தோட்டச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

நிச்சயமாக எமது தமிழ் மக்களின் கணிகளை இவ்வாறாக அபகரித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இந் நிலையில்எங்கள் தமிழ் மக்கள் எதைக்கொண்டு, தமது வாழ்வாதாரத்தை நடத்துவது என்ற கேள்வி எழுகின்றது.

கொக்குத் தொடுவாய் தமிழ் மக்களின் வயல் நிலங்கள் வனஜீவராசிகள் மற்றும் வனவளத் திணைக்களங்களால் அபகரிக்கப்படுகின்றன.

இதனை விட எமது தமிழ் மக்களின் காணிகளை அபகரிப்புச் செய்து சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கின்றனர்.

இவ்வாறாக சிங்கள குடியேற்றங்களை கொக்குத்தொடுவாய் தமிழ்க் குடியிருப்புக்களை அண்டிய பகுதிவரை நகர்த்திக்கொண்டு வந்துவிட்டனர்.

இத்தகைய ஆக்கிரமிப்புச் செயற்பாட்டுக்கு எனது கடுமையான கண்டனத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றேன் – என்றார்.

# வாடிக்கையாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடைப்பட்ட பகுதியில் உள்ள மாபிள் விற்பனையகம் ஒன்றை அதன் உரிமையாளர் நேற்றுக் காலை வியாபார நடவடிக்கைக்காகத் திறந்து விற்பனைக்கு தயாரானார்.

அவ்வாறு விற்பனைக்குத் தயாரான போது அவரது சேட் பொக்கற்றில் இருந்த பணப் பேர்ஸை எடுத்து மேசையில் வைத்தார். அந்தச் சமயம் ஒருவர் பொருள் ஒன்றைக் கோரியுள்ளார். கோரிய பொருளை எடுப்பதற்கு உரிமையாளர் உள்ளே சென்றவேளை காத்திருந்தவர் மேசையில் இருந்த பணப் பேர்ஸை எடுத்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளார்.

மாபிள் விற்பனையில் பெறப்பட்ட 55 ஆயிரம் ரூபா பணம் அந்தப் பணப் பேர்ஸில் இருந்தது.

இது குறித்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளதோடு அயலில் உள்ள சிசிரிவி மூலம் திருடனை இனம் காணும் முயற்சி இடம்பெறுகின்றது.

# கருணாவுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது தமிழர் போராட்டத்தைப் பிழையாகக் காட்டும்!

## அனந்தி சசிதரனின் புதிய கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 23

**கருணாவுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதென்பது, இனம் தன்னை பாதுகாப்பதற்காக நடத்திய ஆயுதப் போராட்டத்தை பிழையாக காட்டுவதாகும். இது புனர்வாழ்வு பெற்ற, பெறாத அல்லது ஆயுத போராட்டத்துக்கு ஆதரவாக செயற்பட்டவர்கள் என எல்லாருடைய மனங்களும் கலங்குகின்ற நிலையை தோற்றுவித்திருக்கிறது என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சரும், தமிழ் மக்கள் கூட்டணியின் நாடாளுமன்ற வேட்பாளருமான அனந்தி சசிதரன் தெரிவித்திருக்கிறார்.**

நேற்று யாழ்ப்பாண ஊடக மன்றத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு, சமகால அரசியல் தொடர்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்த விடயங்கள் வருமாறு:

கருணா என்கிற விநாயகமூர்த்தி முரளிதரன் கடந்த காலங்களில் விடுதலைப் புலிகள் அமைப்பில் ஒரு தளபதியாக இருந்திருக்கிறார். அவர் செய்த துரோகத்தனம் ஓர் இனம் அழிவதற்கு வழிகோலிவிட்டது. ஓர் இனம் முற்று முழுதாக இன அழிப்புக்கு ஆளாவதற்க்கு வழிகோலிய ஒரு துரோகத்தனத்தை செய்துவிட்டார். அதில் எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் விடுதலைப் புலிகளுடைய காலத்தில் கருணா தளபதியாக இருந்து, யுத்தத்தை நடத்தி அதில் 3 ஆயிரம் இராணுவத்தினரைக் கொன்றேன் என கூறியதற்கு நடவடிக்கை எடுப்பது என்பது, ஓர் இனம் தன்னைப் பாதுகாப்பதற்காக ஆயுத போராட்டம் நடத்தியதைப் பிழையாகக் காட்டுவதாக பார்க்கலாம்.

புனர்வாழ்வு பெற்ற போராளிகள் கூட இவ்வாறான பிரச்சினைகள் கிளறப்படுகின்றபோது தங்களுடைய அமைதியான வாழ்க்கையில் அச்சுறுத்தல்கள் வரலாம் என அச்சப்படும் நிலை காணப்படுகின்றது. அதே போல் புனர்வாழ்வு பெற்ற - பெறாத அல்லது ஆயுத போராட்டத்துக்கு ஆதரவாக செயற்பட்டவர்கள் என எல்லாருடைய மனங்களும் கலங்குகின்ற நிலையை இது தோற்றுவித்திருக்கிறது.

மக்களை பாதுகாக்கவே விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்தினார்கள். இலங்கையின் பாதுகாப்பு படையினருக்கு எதிராக யுத்தத்தை நடத்தினார்கள். கடந்த காலங்களில் இராணுவத்தினரைக் கொன்றனர் என்பதற்காக நடவடிக்கை எடுப்பது என்பது ஒட்டுமொத்த இன விடுதலை போராட்டத்தை பிழையான அறிமுகத்துக்கு கொண்டு போவதாக நான் பார்க்கிறேன்.




மேலும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு மக்களினுடைய அபிலாஷைகளுக்கு விரோதமாக தங்களுடைய சுயநல இலாபம் கருதிய அரசியல் போக்கை கொண்டிருப்பதனால் அந்த கட்சிக்கு மாற்று கட்சியாக நாங்கள் கூட்டாக நாடாளுமன்றத் தேர்தலில் களமிறங்கி இருக்கின்றோம். எங்களுடைய எண்ணப்பாங்கானது ஒட்டுமொத்தமாக இன அழிப்புக்கு ஆளான மக்களுடைய அபிலாஷைகளை வென்றெடுக்க கூடியதாக அமையும்.

கூட்டமைப்பை முற்று முழுதாக அரசியல் அரங்கில் இருந்து விரட்ட வேண்டும் என்று நாம் நினைத்தவர்களில்லை. அவர்கள் பிழையான பாதையில் பயணிக்கின்ற போது, அவர்களைச் சரியாக வழிநடத்த வேண்டிய தேவையும், கடப்பாடும் மக்களுக்கும் - எங்களுக்கும் உண்டு. அந்தவகையில் இந்த நாடாளுமன்றத் தேர்தல் மூலம் மக்களுக்கு விரோதமாக தொழிற்பட்டு கொண்டிருக்கின்ற கூட்டமைப்பினருக்கு சரியான பாடம் கற்பிக்கப்படும். அடுத்து வருகின்ற காலங்களில் விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பு சரியான பாதையில் பயணிப்பதற்கு நாங்கள் நிச்சயமாக எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றியீட்டி அவர்களை சரியான பாதைக்கு கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்வோம்.- என்றார். (ட - 11)

## புதைக்கப்பட்ட சிசுவின் உடலில் எட்டுக் கத்திக் குத்துக் காயங்கள்

நோர்வூட் - ஜனபதய பகுதியில் புதைக்கப்பட்ட நிலையில் கடந்த 12 ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்ட சிசு, கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்ட பின்னரே புதைக்கப்பட்டுள்ளதாக பிரேத பரிசோதனை மூலம் தெரியவந்துள்ளது.

சிசுவின் சடலம் டிக்கோயா - கிளங்கன் வைத்தியசாலையில் வைத்து, வைத்திய நிபுணர் இநோக்கா ரத்நாயக்க தலைமையில் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது அந்த சிசுவின் உடற் பகுதியில் எட்டு இடங்களில் கத்திக்குத்து காயங்கள் இருந்துள்ளன என்று கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு கொடூரமாக கொல்லப்பட்ட பின்னரே சிசு புதைக்கப்பட்டுள்ளது என்பதும் தெரியவந்துள்ளது.

குறித்த சிசுவின் தாய் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இருபாலை வாள்வெட்டு; இரண்டு பேர் படுகாயம்

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூன் 23

இருபாலை மடத்தடிப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மடத்தடிப் பகுதியில் மரணச்சடங்கு ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது. இந்த மரணச் சடங்கில் இரு தரப்புக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

வாய்த்தர்க்கம் முற்றிய நிலையில் அது வாள்வெட்டுச் சம்பவமாக மாறியுள்ளது. இந்த வாள்வெட்டுச் சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.



## வன திணைக்கள மிரட்டலுக்கு எதிராக வவுனியா வடக்கில் மக்கள் போராட்டம்

வவுனியா, ஜூன் 23

வன வளத் திணைக்களத்துக்கு எதிராக வவுனியா வடக்கு காஞ்சூரமோட்டையில் நேற்று மக்கள் போராட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட காஞ்சூரமோட்டை பகுதியில் போர்சூழல் காரணமாக 1980, 90 காலப்பகுதியில் இடம்பெயர்ந்து இந்தியா உட்பட வேறு பகுதிகளுக்குச் சென்ற மக்கள் மீண்டும் வந்து காடுகளாக கிடந்த தமது காணிகளையும், தமது பெற்றோர்கள் வசித்த காணிகளைப் பிள்ளைகளும் துப்புரவாக்கி தற்காலிக கொட்டில்கள் அமைத்து வசித்து வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த காணிகள் தமக்குரியது என்று வனவள திணைக்களம் நீண்ட காலமாகக் கூறி வருவதுடன், மக்கள் மீள் குடியேறுவதற்கும், வீடுகளை அமைப்பதற்கும் தடையை ஏற்படுத்தி வருகின்றது. காணிகளைத் துப்புரவு செய்தாலோ, கட்டுமானப் பணிகளை மேற்கொண்டாலோ கைது செய்வோம் எனவும் மக்களை எச்சரித்துவருகின்றனர். இதனால் அப்பகுதி மக்களுக்கும், வனத்துறையினருக்கும் அடிக்கடி முறுகல் நிலை ஏற்பட்டு வருகிறது.

இதுபற்றி வவுனியா வடக்கு பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்களிலும் கலந்துரையாடப்பட்டுப் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்ட போதிலும், அவையெவையும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அனைத்து தரப்பினர் மீதும் நம்பிக்கை இழந்த நிலையில், வன வளத் திணைக்களத்தினால் தொடர்ந்து அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்ற மக்கள், தமக்கான தீர்வினைக் கோரி நேற்று முதல் போராட்டத்தில் குதித்துள்ளனர். தமக்கு நீதி கிடைக்கும் வரை தமது போராட்டம் தொடரும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (ம)

## களனி பல்கலை மாணவர்கள் 9 பேர் கைது

களனி பல்கலைக் கழக வளாகத்தில் இருந்த சிசிரிவி கமராக்களை நீக்கியமை தொடர்பில் களனி பல்கலைக்கழக மாணவர்கள் 9 பேர் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

### வல்லை குண்டுவெடிப்பு;

## கைதானவர் தொடந்தும் ரி.ஐ.டியின் விசாரணையில்

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூன் 23

வல்லைவெளி இராணுவ முகாமுக்கு அண்மையில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இளைஞர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

வல்லை இராணுவ முகாமுக்கு அண்மையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இதில் இராணுவச் சிப்பாய் ஒருவருக்குச் சிறு காயம் ஏற்பட்டிருந்தது. இந்நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார், இராணுவத்தினர் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் நீர்வேலிப் பகுதியில் வசிக்கும் 25 வயதுடைய இளைஞர் ஒருவர் இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டு இருக்கலாம் என்ற சந்தேகத்தில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.


இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கோப்பாய் பொலிஸாரால் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அவர் தற்போதும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.06.2020 இல் வெளியிடப்பெற்றது.




# சித்திரப்போட்டி





படம் 1
லனுஜன் நவரட்ணம் - தரம் 3
North Bridlewood Junior Public School, Scarboough, Canada



படம் 2
அபர்ணா உதயகுமார் - தரம் 6
David Leeder Middle School, Canada.

**நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் ‘வீதி விபத்து’ எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர். தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிகமாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்த வர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.**

**இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு- ‘கோழிக் கூடு’**

அ. க. ரிஷாளன் - தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

த. கபிலாஷ் - தரம் 8
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

த. யதுனேஷ் - தரம் 4
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

உ. ஆராதனா - தரம் 2
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

உ. ரோஷித் - தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

டி. ஹரிஸ்மன் - தரம் 8
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

ராமதாசன் ஹர்சிகா - தரம் 4
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி

டி. அபிலாஷ் - தரம் 10
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

இ. லதுஷன் - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

கி. அஸ்வதா - தரம் 4
கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை

கே. நிருஜிகா - தரம் 4
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ஆர். பிரிதி - தரம் 1
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

வி. கமரூன் - தரம் 1
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி

அவிஷிகன் விமலானந்தன் - தரம் 1
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

பை. ஹண்சிகா - தரம் 4
யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்

ஏ. அக்ஷயா - தரம் 8
யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

ரி. யதுசனன் - தரம் 10
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

ஏ. சதுர்யா - தரம் 8
யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

அஸ்ரிகா பைசர் - ஆரம்ப உயர்தரம்
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

வி. சலோமி - தரம் 6
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

சந்திரகுமார் அவிநாஷ் - தரம் 4
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி

கு. கஜோரிகா - தரம் 5
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

என். வித்யாசாகர் - தரம் 9
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

கி. துஷாந்த் - தரம் 8
தி/ செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயம்

காலைக்கதிர் Kalaikkathir

**கோழிக் கூடு**




## சித்திரப்போட்டி

**இன்று (23/06/2020) தலைப்பு**
**கோழிக் கூடு**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**